உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி—௩௯.] விஷு ஞு தை மீ [பகுதி—௩.

Vol. 39. January—February 1942. No. 3.

உள்ளுறை.

கம்பராமாயண சாரம்:— } ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G.B.V.C. ௧௧௩—௧௨0

இந்துக்கள்வரலாறு:—ஸ்ரீ. த. இராமநாதபிள்ளை, B.A. (Lond.) ௧௨௧—௧௨௮

கம்பராமாயணசார சம்பந்தமான குறிப்பு:— } ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G.B.V.C. ௧௨௯—௧௩0

இராமசெயம்:— (உத்தரகாதை) } T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர். ௧௩௧—௧௩௬

'ஐயமகற்றல்'-ஆராய்ச்சி:— } ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G.B.V.C. ௧௩௭—௧௪௮

தமிழ்நாட்டெல்லை:—நல்லூர். சுவாமி ஞானப்பிரகாசர் ௧௪௯—௧௫௧

அநுதாபக்குறிப்பு:— ௧௫௨

பட்டினப்பாலைத் தலைவன் யார்:— } ஸ்ரீ. S. S. பாரதியார், M.A., B.L. ௧௫௩—௧௬௬

மதிப்புரை:— ௧௬௭—௧௬௮

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1942.

Printed by Srimathu R. SHANMUGA RAJESWARA NAGANATHA SETHUPATHY AVL., and Published by THIRU. NARAYANA IYENGAR at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
3.	*யாப்பணியிலக்கணங்கள்			
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
6.	மகாபாரதம் அரும்பதவுரையுடன்	4	0	0
7.	*தோத்திரத்திரட்டு			
8.	*தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம்.	6	0	0
	*ஷை இரண்டாம்பாகம்	4	8	0
	ஷை மூன்றாம்பாகம்	5	0	0
9.	*அபிதானசிந்தாமணி			
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ...	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
12.	அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ்	0	8	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
14.	*தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ...			
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம்	1	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0
	திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ...	0	1	0

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௯.] விஷு௵ தைமீ [பகுதி-௩.

Vol. 39. January—February 1942. No. 3.

கம்பராமாயணசாரம்

[ராவ்ஸாகிப் ஸ்ரீ. வெ. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள், G.B.V.C.]

௮௮-ஆம் பக்கத் தொடர்ச்சி.

வானரர் களங்காண்படலம்

வானரர் (அளவற்ற மூலப்படையையும் அதன்பின்வந்த ஆயிரம்வெள்ளம்படையையும் இராமன் தனியனாய் மாய்த்த) படுகளத்தைப் பார்வையிட்டதைக் கூறுவது.

வானரர் போர்க்களத்தைப் பார்த்தல்

சுக்கிரீவன், வானரசேனையோடுவந்து, பெரும்போர்புரிந்த சிரமம் தீர இளைப்பாறிக்கொண்டிருந்த இராமனைக் கண்டு, அடி பணிந்தான். பின்பு, 'ஐயனே! மூன்றுலகத்தினும் அடங்காத பெருமையையுடைய சேனையை நீ தனியனாக எவ்வாறு எதிர்த்துப் பொருது அழித்தாய்!!' என்று சுக்கிரீவன் வினவ, இராமன், 'நீ, விபீடணனோடுசென்று படுகளத்தைப்பார்' என்று கூறினான்.

படைத்தலைவர்கள் படுகளத்தைப் பார்வையிடல்

சுக்கிரீவனும் படைத்தலைவர்களும், விபீடணனுடன்போய்க் கழுகுகளும் பருந்துகளும் பேய்களும் கூடியிருக்கும் படுகளத்தைப்பார்த்துத் திகைத்துப் பயந்து வியந்து ஆனந்தமடைந்தார்கள். அவர்கள், 'எழுகடல்களும் ஒருங்குதிரண்டாற்போன்ற

இராக்கதர்பிணக்கூட்டங்கள் கிடந்த இடங்களை ஆயிரம் ஆண்டுகள் பார்த்தாலும் முழுதுங்காணமுடியாதனவாயிருக்கின்றன. அவைகளை விவரமாகக் கூறுவாயாக' என, விபீடணன் கூறுகின்றான்.

படுகளவருணனை

'நம்மவர்களே! இந்தப் போர்க்களத்திலே இராமபாணங்களாற் கொல்லப்பட்ட யானைகளின் பிணக்குவியல்களின்மேல், பந்தலிட்டாற்போலக் காகங்கள் பறந்துமொய்த்தல், பூமியிலே பல இடங்களிலுள்ள கரியமலைகளின்மீது கார்மேகங்கள் படர்ந்து மொய்த்தலை ஒத்தலைப் பாருங்கள்.

இராமபாணங்கள்பட் டிறந்த இராக்கதர்பிணங்கள் அந்த அம்புகளாலிறந்த யானைப்பிணங்களின்மீது கிடத்தல், சிங்கங்கள் குன்றுகளில் தூங்குதல்நேர்தலை நோக்குங்கள். இராமபாணங்கள் எனக்கு உனக்கு என்று ஒன்றின்முன் ஒன்று சென்று தைத்து உயிரையுண்டதனால், இறந்துகிடக்கின்ற இராக்கதருடல்கள், தம் முட்புதைந்த அம்புகளோடு காணப்படுபவை, மலைப்பாம்புகள் குகைகளுள் நுழைந்து தூங்கும் மலைகள்போல்வதைக் காணுங்கள்.

கருணைநிறைந்த கண்ணனை இராமபிரான் எய்த அம்புகளால் இறந்த கரிய இராக்கதர்களின் பெரிய பிணப்பரப்பிடையே, கொல்லப்படும்போது கோபத்தாற் சிவந்த அவர்கள் முகங்கள் விளங்கல், கருங்கடலிற் செந்தாமரைமலர்கள் பொலிதலை நிகர்தலைப் பாருங்கள்.

இராமசரங்களால் தேர்க்குதிரைகள் இறந்திட, வெண்சேலைக் கொடியுடைய திண்ணிய தேர்கள், இரத்தவெள்ளத்தில் இழுக்கப்பட்டுச்செல்பவை, கடலிற்செல்லும் பாய்மரக்கப்பல்கள் நேருவதைப் பாருங்கள்.

இராமபாணம்பட்டு, எழுந்துசெல்லும் வலிமையையிழந்த யானைகள், இரத்தவெள்ளத்திலே எழுதற்குமுயன்று தலைதூக்குதலும் எழமாட்டாது தலையைத் தாழவிடுதலும் செய்வன, கடலிலே வெளியாக எழுதலும் மறைவாக முழுகுதலும் செய்யும் திமிங்கிலங்களை நேருதலைப் பாருங்கள்.

கவந்தங்கள் கூத்தாட, அதற்கேற்பப் பேய்கள் கைதட்டித் தாளமிட்டுத் தாமும் கூத்தாடுதல், நடனம் பழகுவார்க்கு இப்படி ஆடுக என்று பரதாசாரியன் தான் ஆடிக்காட்டுதல்போல்வதைப் பாருங்கள்.*

அந்தக் கூத்தாடும் பேய்களின்கால்கள், இறந்துகிடக்கும் இராக்கதப்பிணங்களின் பல்லிடுக்குக்களிலே அகப்பட்டதோடு, அப்பிணங்களின் அறுந்துதொங்கும் நரம்புகளால் தொடக்குண்டு சிக்கி, எந்திரப்பொறியில் அகப்பட்டுக்கொண்டனபோலவாக, அந்தக் கள்ளப்பேய்கள் (தம் கால்களை) மெள்ள விடுவித்துக் கொண்டு நழுவிப்போவதை நோக்குங்கள்.

இராமபாணங்களாலடிபட்ட இரண்டு யானைகள், ஒன்று மற்றொன்றின் வாற்புறம் தலையும் தலைப்புறம் வாலுமாக மாறி ஒன்றுடனொன்று ஒன்றி, முன்னும் பின்னும் முகமுடைய ஓர் விசித்திர மிருகம் நேர்தலைக் காணுங்கள்.

யானைகளை இழுத்துக்கொண்டுசெல்லும் இரத்தவெள்ளம் கடல்வெள்ளத்திற் கலக்குமிடத்திலே, கடலிலுள்ள சுறுமீன்கள் இரத்தவெள்ளத்துள்ள யானைகளை, மலைகள்போன்ற இவை யாவையோ? வென்று அஞ்சிக் கிட்டநில்லாது எட்டச்செல்வதைக் காணுங்கள்.

இரத்த ஆறுகள், இருபுறத்தும் ஒதுக்கும் பிணக்குவியல்கள் கரைகளாகத் தம்மேல் மிதந்துசெல்லுகின்ற (இரத்தந்தோய்ந்த) வெள்ளைக்கொடிச்சீலைகளும் வெண்பட்டுக்குடைகளும் வெண் சாமரைகளும் (செந்நீர்) நுரைகளாகச்சென்று கடலிற் கலப்பதைக் காணுங்கள்.

---

* கவந்தம் ஆட முன்புதம் களிப்பொ டாடு பேயினம்
நிவந்த ஆடல் ஆட்டு விக்கும் நித்த கார ர் போலுமே
(கலிங்கத்துப்பரணி)

நிவந்த - உயர்ந்த. நித்தம் - நிருத்தம் - நடனம். நித்தகாரர் - பரதாசாரியர் - நட்டுவர்.

இராமபாணத்தால் மடிந்துகிடக்கின்ற யானைகளுள்ளே, பத்துக்கோடியானைகள், பாற்கடல் கடையப்பட்டபோது, அமிழ்தந் தோன்றியபோது அதனோடு தோன்றியவைகள்; மேகங்களும் கடல்களும் நீரற்றாலும் மதநீர்ப்பெருக்குமாறாத பன்னிரண்டு கோடியானைகள், பிரமதேவன்செய்த யாகத்திற் பிறந்தவைகள்; அட்டகசங்கள்*போல, எட்டுத்திசைகளையும் தாங்கும் வலிமை யுடையனவாயினும், 'திசைகளைத் தாங்குங்கள்' என்று பிரம தேவன் கட்டளையிடாமையால், திசைகளைத் தாங்காதனவும், தேவர்கள்போல இமையாத கண்களுடையனவும், பதும†மென்னும் பெருந்தொகையினவுமான யானைகள், வடக்குத்திக்கைத் தாங்கும் சார்வபௌமனென்னும் பெயர்கொண்ட யானையின் சந்ததிகள்; ஓராயிரகோடி யானைகள், இராவணனுக்குக் கப்பமாகத் தேவராசன் கொடுத்தவை; அவன் அசுரராசனிடம் திறையாகப்பெற்ற யானைகள், அளவற்றவை.

இராமபாணங்களாற் கொலையுண்டுகிடக்கின்ற குதிரைகளிலே பத்துலட்சங்குதிரைகள், அமுதமதனகாலத்திற் பாற்கடலிற் பிறந்தவைகள்; மற்றொரு பத்துலட்சங் குதிரைகள், இராவணன் வருணனைவென்று கவர்ந்தவைகள்; வேறொரு பத்துலட்சம், அவனுக்குக் குபேரன் தோற்றபோது விட்டுவிட்டுப்போனவை' என்று விபீடணன் எடுத்துக்கூறியபோது, வானரத்தலைவர்கள், 'இந்தப் படுகளத்தை நீ காட்டினாலும், உன் உதவியில்லாமல் நாங்களே கண்டாலும், அந்தக்களம், முழுதுங் காணமுடியாததாயிருக்கின்றது; ஆதலால் நாம் திரும்பி இராமபிரானிடஞ் செல்வோம்' என்று கூற, எல்லாரும் படுகளத்தைவிட்டுப் புறப்பட்டு, இராமனிருந்த இடத்தையடைந்து, அவனை வணங்கி, அவனருகே அவன் போராண்மையை நினைந்து மகிழ்ந்து அமர்ந்திருந்தார்கள்.

வானரர் களங்காண்படலம் முற்றிற்று.

---

* அட்டகசங்கள் - (எட்டுத்திக்குகளைத் தாங்கும்) எட்டுயானைகள்.

† பதுமம் - கோடிகோடி.

இராவணன் களங்காண்படலம்

இராவணன் (மூலபலம் முடிந்த உண்மையைக் காணுதற்கு அது மடிந்த) படுகளத்தைப் பார்த்தலைக் கூறுவது.

இராவணன் விருந்தமைத்தல்

இராவணன், தனக்காகப் போர்க்கோலம்பூண்டு அன்புடன் போர்புரிந்துவருந்தின இராக்கதர்க்கு விருந்துசெய்யவிரும்பி, வானநாட்டினரைத் தருவித்துத் 'தேவலோகபோகங்களெல்லாம் அமைய, விருந்துக்குவேண்டியன யாவும் செய்யுங்கள்; யாதாயினும் குறைநேருமானல், உயிரையிழப்பீர்கள்' என்று கூறினன். தேவர்கள், மதுவர்க்கமும் மாமிசவகைகளும் வத்திரவிசேடங்களும் சந்தனமும் மலர்களும் கத்தூரிகலந்த வாசனைநீரும் சயனங்களும் கொண்டுவந்து, மாளிகையின் உள்ளும் புறமும் நிறையச்செய்தார்கள். தேவமாதர்கள், விருந்துநுகர்வாருக்கு வாசனைத்தயிலம் தேய்த்து, நறுமணநீராட்டி, அன்னபானதிகளை ஊட்டிச் சயனம் பரப்பிப் பாடுதலும் பாட்டின் அபிப்பிராயம் புலப்பட அபிநயங் காட்டி ஆடுதலும்செய்து, இன்பம் ஊட்டுவாரானர்கள். விருந்தினருள் அரசராயுள்ளார் முதலாக, அடிமைகளாயுள்ளார் முடிவாக, எல்லாரும் எல்லையில்லாத இந்திரபோகத்தை நுகர்வாரானர்கள்.

தூதர், மூலபலம் நிர்மூலமானதைத் தெரிவித்தல்

இவ்வாறு குதூகலகோலாகலவைபோகங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கும்போது, தூதர்கள், வந்து, இராவணன் காதருகேசென்று, நடுங்கின உடம்பும் வரண்ட நாவும் ஒடுங்கின மூச்சும் உலைந்த நெஞ்சும் இடுங்கின கண்ணும் (மனத்திலிருந்துகொண்டு வாய்க்கு வர மறுக்கின்ற வார்த்தைகளை வலிந்து வெளிப்படுத்தியதுபோலப்) பிடுங்கின பேச்சும் உடையராய், ஏங்கியேங்கிப் போர்க்களநிகழ்ச்சிகளைப் புகல்கின்றார்கள்.*

---

* நடுங்கு கின்ற வுடலினர் நாவுலர்ந்
தொடுங்கு கின்ற வுயிர்ப்பின ருள்ளழிந்
திடுங்கு கின்ற விழியின ரேங்கினர்
பிடுங்கு கின்ற வுரையினர் பேசுவார்.

உயிர்ப்பு - மூச்சு.

'தேவர்களைச்செயித்தோனே! இனி இங்கே இன்று விருந்துண்ண வருவார் யார் இருக்கின்றார்கள்? நீ அனுப்பிய மூலபலம் முழுதும் இராமன்கையில் ஒன்றினால் நாழிகை ஏழில் நாசமாய் விட்டது. நீ, இராக்கதர்க்காகத் தேவர்களைக்கொண்டு அமைத்திருக்கிற விருந்தன்னம், அவர்களெல்லாரும் இறந்துவிட்டார்களாதலால், அவர்களுக்கு உத்தரகிரியையில் அன்னபலியாகப் பிண்டம்போடுதற்குத்தான் உதவும்' என்று தூதர் சொன்னார்கள்.

இராவணன் தூதர்சொல்லை நம்பாமை

அதுகேட்ட இராவணன், மகிழ்ச்சிநீங்கிக் கோபமும் அச்சமும் அவமானமும் அடைந்து, திகைத்து, அசைவற்றுச் சித்திரப்பதுமையை ஒத்திருந்தான். பின்பு, 'என்னினும் வலியர்; என்றும் இறவாதவர்; கடல்மணலைக்கணக்கிட்டாலும் கணக்கிடமுடியாதவர்; அப்படிப்பட்ட அரக்கர் ஒருவரும் மிஞ்சாமல் அனைவரும் மாண்டார்களென்று நீங்கள்சொல்வது பொய்போலும்' என்று கூறினான்.

மாலியவான், 'தூதர்சொல்லியது உண்மை'யேன்று நன்மதிகூறல்

இராவணன்கூறியதைக்கேட்ட மாலியவான், 'தூதுவர் பொய்யார். மூலபலம் முழுவதையும் இராமன் ஏகனாய் அழித்தது திண்ணமாக உண்மையானதே. உலகமுடிவுகாலத்தில், 'இவையெல்லாம் எரிந்தழிக' என்ற சங்கற்பமாத்திரையானே, இமைப்பொழுதிலே எல்லா உலகங்களையும் அசேடமாக அக்கினிக்கிரையாய் அழியச்செய்பவன் சங்காரமூர்த்தி ஒருவனேயன்றோ? "எல்லா உலகங்களையும் படைத்துக் காத்து அழிக்கின்ற பரம்பொருளான திருமாலே, சிராமனாக அவதரித்திருக்கின்றான்" என்று விபீடணன் விளம்பியது, மெய்யே. இதுவரையும் உன்னிடம் இருந்த இந்திரச்செல்வம், இப்போது நீங்கிவிட்டது. உன்னால் உன்சுற்றம், முற்றும் சூனியமானது. இனியாயினும், நற்செயல்செய்வாயாக' என்றான்.

இராவணன், 'இலக்குமணன் இறந்ததனால் இறுதிவெற்றி எனதே' எனல்

'இலக்குமணனை வேலெறிந்துகொன்று கூற்றுவனுக்குக் கொடுத்திட்டேன். அதனால் வானரத்தலைவர்கள், மறுகி வருந்திக் கொண்டிருக்கின்றார்கள். தம்பி இறந்ததுதெரிந்ததும், இராமன்

உயிரோடிருத்தலை உகவானாய், இறந்திடுவான். ஆகவே, மூலபல நாசத்தால் ஏற்பட்ட மனக்கலக்கம் ஒருபுறம் இருக்கவேசெய்தாலும், முடிவானவெற்றி என்வசத்தினதே' என்று இராவணன் கூறினான்.

தூதர், இலக்குமணன் உயிர்பெற்றதையுரைத்தல்

அப்போது, போர்க்களத்தில் இலக்குமணன் பிழைத்தெழுந்ததைக் கண்டுவந்த தூதர்கள், இராவணன்கூறியதைக்கேட்டு, 'ஐயனே! அனுமான் மருந்துமலைகொணர்ந்ததனால் இலக்குமணன் உயிர்மீளப்பெற்றிட்டான். நீ போய்ப் பார்ப்பாயாக' என்று கூறினார்கள்.

இராவணன் கோபுரமேறிப் போர்க்களம் பார்க்குதல்

இராவணன் மூலபலம் அழிந்தது மெய்யோ பொய்யோ என்று மறுகிக்கொண்டிருந்த மனம் தெளிதற்காகக் கோபுரத்தின் மேலிடத்தையடைந்து, போர்க்களத்தில் மூலபலம் முற்றும் மாண்டுகிடப்பதை நேராக இருபதுகண்களாலும் கண்டான்.* இறந்த இராக்கதரின்மனைவியர், கருங்குவளைமலர்கள்போன்ற கண்கள் செங்குவளைமலர்கள்போலாம்படி கண்ணீர்சொரிந்து கைகளைத் தலைமேல்வைத்துக் கடலொலித்தல்போலக் கதறியழும் பேரொலி (மூலபலநாசவுண்மை கண்களாலறியப்பட்டதுபோலக் காதுகளாலும் அறியப்படும்படி) இருபதுகாதுகளிலும் ஒலித்தது.

எண்ணிறந்த யானைப்பிணங்களை யேந்திக்கொண்டு மண்ணைத் தோண்டி மலைகளைப் பறித்து மண்டிச்செல்லும் இரத்தப் பேராற்றுப் புதுவெள்ளத்திலே களித்துக்குளிக்கும் பேய்க்கூட்டத்தை (இறந்தார்க் கிரங்கி இருபதுகண்களும் பொழியும்) கண்ணீராறு கடலிற்போய்க் கலவாநிற்கக் கண்டான்.

---

* 'நாகபாசத்தாலும் பிரமாத்திரத்தாலும் மாண்ட இலக்குமணன் உயிர் பெற்றெழுந்ததைக் கண்டிருத்தலால், இராவணனுக்கு இலக்குவன் உயிர் பெற்றெழுந்ததில் ஐயமில்லையாதலால், மூலபலத்தைப்பற்றிய ஐயந்தீரவே கோபுரமேறிக் காண்கலாயினனென்க.' வை. மு. கோ.

இராக்கதருடல்கள், தாம் உயிரைத்தாங்கியிருந்ததனுலாம் பேற்றை இராமபாணங்களால் துண்டிக்கப்பட்டதனுற் பெற்ரூமென்று மகிழ்கூர்ந்து, நரிகளின் குரல் பாட்டிசையாகப் பேய்கள் தாளங்கொட்டாநிற்கக் கூத்தாடுவதை இராவணன் கண்டான். தம் கணவருடைய பிணங்களிற் காணப்படும் புண்களுள்ளே கையிட்டுப் பேய்கள் நிணத்தைப் பிடுங்குவதைக்கண்டு, அந்தப் பேய்களைத் தொடர்ந்து பிடிக்கச்செல்ல, அவைகள் மண்ணைவிட்டு விண்ணிலோடத் தாமும் விண்ணிற்சென்று பிடித்துக் கண்களிருத்தலாலன்ரூ, புண்களைக் கண்டுகொள்கின்றனவென்று, அப்பேய்களின் கண்களை நகங்களால் தோண்டிப்பிடுங்கி நீக்கும் இராட்சசிகளின் கூட்டத்தை அவன் கண்டான்.

இரத்தஆறு கடலிற் கலக்க, இரத்தப்பெருக்கை அலைகள் கரையில் எறிதல், கடல் தன்னுட்சென்ற இரத்தத்தை உவட்டி வாந்தியெடுத்தல்போல்வதை அவன் கண்டான்.

மண்பிளக்கும்படி கூத்தாடுகின்ற கவந்தக்கூட்டத்தையும், விண்பிளக்கும்படி ஆரவாரித்து (இயல்பாக எப்போதும் விழித்திருக்கும்)கண் பிளக்கும்படி அலர விழித்துக் களித்து (அப்போர்க்களத்தை) நோக்கும் தேவர்கூட்டத்தையும் அவன் கண்டான்.

இராவணன், அரசிருக்கைமண்டபமடைதல்

அவன், கோபாக்கினி மிகுதியாகத்தோன்றிய நெஞ்சும், (அந்த அக்கினி சடசடவென்று ஒலித்தல்போலக் கடகடவென்று சிரிக்கின்ற) சிரிப்பு உண்டாகிய வாய்களும், (அந்த அக்கினிப்) புகை வெளிப்படும் மூக்குகளும், (அந்த அக்கினிப்) பொறிகள் வெளிப்படும் கண்களும், (அது முழங்கி யெரிந்து சுவலிக்கும்) சுவாலை போன்ற (அதட்டுச்) சொல்லும் உடையவனுய்க் (கோபக்குறியாக நாக்குக்களால்) கடைவாய்களை நக்கிக்கொண்டு, கோபுரத்தினின்றிறங்கி, (இனிச் செய்வது யாது? என ஆலோசித்தற்கு) அரசிருக்கைமண்டபத்தையடைந்தான்.

இராவணன் களங்காண்படலம் முற்றிற்று.

[தொடரும்.]

உ

இந்துக்கள் வரலாறு

ஸ்ரீ. த. இராமநாதபிள்ளையவர்கள், B.A. (LOND.)

(கூகூ-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

3-ஆம் அதிகாரம்—தொல்காப்பியர்காலம்

தொல்காப்பியம் நிலந்தருதிருவிற்பாண்டியனவைக்களத்தே அதங்கோட்டாசானென்னும் நல்லிசைப்புலவர் கேட்ப, அரங்கேற்றப்பட்டதெனத் தொல்காப்பியருக்கு ஒருசாலைமாணுக்கரான பனம்பாரனுர் கூறிய பாயிரத்தாற் புலப்படுகின்றது. ஏனைய பல சங்கநூல்கள்போலத் தொல்காப்பியமும் செல்லரித்தேனும் கடல்கொள்ளப்பட்டேனும் எரிந்தேனும் அழிந்திருப்பின், பண்டைத் தமிழரை நாகரிகமற்றவர் என அறிவிலிகள் பகர்ந்திருப்பர். நந் தமிழ்முதாதையர் அறிஞராகலின் பனையோலையின்மாத்திரமன்றிச் செப்பேடுகளிலும் கற்பாறைகளிலும் எழுதினராகலின், தமிழ் நாகரிகத்தின் தொன்மையும் பெருமையும் இன்று இனிது தெளிவாகின்றன. தமிழர் எழுத்துஞ் சொல்லும் ஆராய்வதுடன் நில்லாமல் பொருளையும் ஆராய்ந்து இலக்கணத்தின்பாற்படுத்தினர். உலகவழக்கிலிருந்த நிகழ்ச்சிகள் செய்யுள்வழக்காயினவாகலான் அகப்பொருளும் புறப்பொருளும் கூறும் நூல்கள் சரித்திரவுண்மை மிகுந்துள்ளவை என்பதை ஓர்ந்துணர்க.

போர்முறை

தமிழர் போர்புரிந்துழியும் மூர்க்கராக ஒழுகவில்லை என்பதும் போர்நீதி வழுவாது ஒழுகினர் என்பதும் அறியலாகும். ஆயுதமற்றோனொருவனுடன் தமிழ்ப்போர்வீரன் ஒருபொழுதும் அமர் புரியான். தமிழ்த்தாய்மார் தம் குமாரர் போரில் இறந்துபட்டனராயினும் துயருறார். முதுகிற் புண்படாமல் இறந்ததைக் கேள்வியுற்று வீரத்தாய்மார் மகிழ்ச்சியடைந்தனர் எனப் புறப்பாட்டுக்கள் முழங்காநிற்கும். தமிழ்வேந்தர் போர்முரசறையுமுன் பிறநாட்டுக் குடிகளுக்கு அறிவித்தே போர்தொடங்கினர்.

"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறுதீரும்
எம்மம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மின்"

என வள்ளுவரால் முரசறைவித்தல் மரபாகலால், தமிழரின் போர் நீதி எவ்வளவு சிறந்ததென்பது விளங்கும். தமிழர் விற்படை வேற்படை தேர்ப்படை குதிரைப்படை கப்பற்படை என ஐவகை மூலப்படைகள் உடையராயிருந்தனர். வேழங்களும் அவர்களாற் செலுத்தப்பட்டன. தமிழ்மக்கள் போர்தொடங்க, ஆநிரைகவர்தல் வழக்கம். நிரைகவருமுன் விரிச்சியோர்தல் உண்டு. தமிழரும் உரோமரைப்போல் விரிச்சி ஓர்ந்தே போர்க்களத்திற்குப் புறப்படுதல் வழக்கம். நிரைகொள்ளுதற்கு எழும் வீரர் தாம் குறித்த பொருளின்பயன் அறிதற்கு நற்சொல்லாய்தலை விரும்பி நிமித்திகனை ஏவி நிமித்தம்பார்ப்பர். இவ்விரிச்சியோர்தற்குமுன் வினைமேற்செல்லும்வீரர் மன்றின்கண் மலரும் நெல்லும் தூவிச் செம்மறியாட்டைப் பலியிட்டுக் கொற்றவை முதலிய போர்த் தெய்வங்களைக் கைகூப்பி வணங்கி நன்மொழி யாதேனும் பெற்றே எகுவர்.

"அருங்கடி மூதூர் மருங்கிற் போகி
யாழிசைன யினவண் டார்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
யரும்பவி ழலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப"

என்னும் முல்லைப்பாட்டடிகளால் தமிழர் நிமித்தம்பார்த்தனர் எனத் தெரிகிறது. விரிச்சிவிலக்கிப் போர்மேற்செல்லலும் உண்டு. வெட்சிவீரர் கொடுவில் இடனேந்தி ஏற்றினம்நிற்கும்நிலைகருதி ஆகோளொன்றேகுறித்துக் கரந்துசெல்வர். பகைவர் தங்கருத்துணரின் தமக்கு அழிவுநேரிடுமென அஞ்சினால்லர்; தம் குறிக்கோளை மாற்றார் உணரின், தம் ஆநிரைகொண்டு ஒளிப்பாராகலான், காரியக்கேடு நிகழுமென அஞ்சியே வெட்சிவீரர் கரந்துசெல்வர். நிரைகவர்தலும் நிரைகாத்தலும் வெட்சித்திணை என்னும் ஒழுக்க

மாகும். ஒற்ருராய்தற்கு நள்ளிருட்கண்சென்று அறிந்துவருத லாகிய வேய் என்னும் துறையும், மாற்றரசனுடைய நகரவாயிலி லிருந்து ஒருவரும் புறப்படாதவாறு ஊர்மருங்கே இறுத்தலாகிய புறத்திறை என்னும் துறையும், விரைவாகப் பரிகடாவி எரிகொளுவு தல் முதலிய செயல்களால் அரண்களைபழித்துப் புறஞ்சேரி யிடத்து நிரைகாப்போரைக் கொல்லுதலாகிய ஊர்கொலை என்னும் துறையும் வெட்சித்திணையின் முக்கியத் துறைகளாகும். இவ் வண்ணம் ஒவ்வொருதிணையிலும் பல துறைகளுண்டு. ஒவ்வொரு திணைக்குரியோரும் தத்தம் திணைக்குரிய பூக்களைச் சூடுதல் வழக்கம். வெட்சித்திணைக்குரியோர் வெட்சிப்பூ அணிதல் வழக்கம்.

இனி மண்ணிடத்துள்ள வேட்கையால் இருவேந்தர் களத்திற் போராடல் வஞ்சித்திணை எனப்படும். அரணை வளைத்தலும் அதனை உள்ளிருக்கும் வேந்தன் காத்தலும் உழிஞைத்திணை எனப்படும். யானை குதிரை காலாள் என்னும் மூவகைத்தானையோடு புகழ் கருதிக் களங்குறித்துப் பொருதல் தும்பைத்திணையாகும். பகைவ ரைக் கொன்று ஆரவாரித்தல் வாகைத்திணையாகும். போர் ஒழிந்த புறப்பொருள்களைக் காஞ்சித்திணையும் பாடாண்டிணையும் புகலா நிற்கும். வீட்டின்பம் விளக்கும் நோக்கமாக அறம் பொருள் இன்பம் நிலையாமை என்றிவற்றைக் கூறல் காஞ்சித்திணையின்பாற் படும். போரில் விழுப்புண்பெற்று அதைக் கிழித்திறத்தல் மறக் காஞ்சி என்னும் துறையாகும். பரிசில்வேண்டிப் புலவனொருவன் புரவலனொருவன்குணதிசயங்களைப் பாடுதல் பாடாண் என்னும் திணையாகும்.

நடுகல் (வீரக்கல்)

இறந்தவீரரின்புகழை நாட்டற்கு வேந்தர் கல்லெடுத்து அவர் வீரச்செயலைச் சிலையிலெழுதி நடுதல் வழக்கம். நடுகல்லில் வீரன்பெயரும் பீடும் எழுதப்படும். போரில் இறப்போர் வீர சுவர்க்கம் புகுவாராகலின், நடுகற்களை வழிபடுதலும் உண்டு. பண்டைத்தமிழர் மானத்தைத் தம்முயிரினும் ஓம்பினர். தோல்வி யடைந்தோரும் தம்நோக்கங்கள் சித்திபெருதோரும் வடக்கிருந்து

வீரசுவர்க்கம் அடைந்தனர். வேந்தரும் அந்தணரும் ஆானுருற் றுழி, வடக்கிருந்தனரெனப் புறநானூற்றுச்செய்யுட்களாலும் புலப் படும். வடதிசையைப் பார்த்திருந்து ஆசையாவற்றையும் வென்று ஐம்புலன்களையும் ஒடுக்கி உண்ணுதிருந்து உயிர்துறத் தல் தமிழ்நாட்டில் வழக்கமாயிருந்தது.

சமயம்

தொல்காப்பியர்காலத்திலேயே தமிழர் அருவவழிபாடும் உருவவழிபாடும் செய்துவந்தனரெனக் கூறலாம். இயமம் நியமம் ஆசனம் வளிநிலை தொகைநிலை பொறைநிலை நினைதல் சமாதி என்னும் அட்டாங்கயோகமுறையைத் தமிழர் தழுவி அருவப் பொருளாகவும் தத்துவங்கடந்தபொருளாகவும் பற்றற்றபொரு ளாகவும் உள்ள கந்தழியின்நிலையை அடையமுயன்றனர். கந்தழி என்பது பற்றற்றநிலையாகிய சிவத்தின்பெயராகும். ஐவகை நிலத்துச் சனங்கள் தத்தம்நிலத்திற்குரிய தெய்வங்களையும் வணங்கினர். நெய்தல்நிலத்து நுளையர் (பரதவர்) சுறவுக்கோடு நட்டு வருணனை வழிபட்டனரெனவும் குறிஞ்சிநிலத்து எயினர் (குன்றவர்) முருகனுக்குத் தினைமாவும் ஆட்டிரத்தமும் அளித்து வழிபாடாற்றினரெனவும், முல்லைநிலத்து இடையர் திருமாலுக்கு ஆனைந்தளித்து ஆராதனைசெய்தனரெனவும், மருதநிலத்து வேளா ளர் வானுக்கு அதிதேவதையாகிய இந்திரனைப் பரவினரெனவும், பாலையொழுக்கத்தினையுடைய ஆறலைகள்வர் கொற்றவையை வழி பட்டனரெனவும் தொல்காப்பியம் கூறுநிற்கும். மயிலேறிவிளையா டும் முருகவேள் தமிழருடைய சிறந்த தேவராயினர். பிற்காலங் களிற் பிரமன் சாத்தன் காளி காமன் முதலியோரும் கோட்டம் பெற்றனர். பண்டைக்காலத்திற் பூசாரிகள் செய்யும் கிரியைகள் மிகக்குறைவே. ஒவ்வொருநிலத்தினரும் பொங்கலிட்டு மலர்தூவிப் பழங்களைப் படைத்து அருட்பாக்களைப்பாடி ஆவேசங்கொண்டு எழுந்தாடித் தெய்வங்களைத் தொழுதனர். சமயக்கிரியைகள் ஒழிந்த சமூகக்கிரியைகளும் மிகச்சிலவே. குழந்தைகளுக்கு நாம

மிடுதல் பஞ்சாயுதந்தரிப்பித்தல், அன்னமளித்தல் வித்தியாரம்பஞ் செய்வித்தல் முதலியவை இக்காலத்திற்போல் ஆடம்பரமாகச் செய்யப்படவில்லை. மணக்கிரியைகள் சாக்கிரியைகள் சிரார்த்தக் கிரியைகள் முதலியவை நல்லகிரியைகளாயினும், ஊதியம்நோக்கியே இக்காலத்தவரால் செய்யப்படுகின்றன. கிரியைசெய்வதால் விளையும் நன்மை தீமைகளை ஈண்டு ஆய்தல் பிறிதொன்றுமொழிதல் என்னும் குற்றத்தின்பாற்படும்.

மணமுறை

பண்டைத் தமிழ்மக்களின் மணமுறைகளும் அகவொழுக்கமும் ஏனையமக்களின் முறைகளிலும் ஒழுக்கங்களிலும்பார்க்க மிகச் சிறந்தன. ஒருபெண்ணின் சம்மதம்பெற்று அன்பாற் கூடியெழாகாது ஒருத்தியை ஒருவன் வலிந்துகொள்ளுதல், இராக்கதமணமென இழித்துரைக்கப்படும். இம்முறை அசுராலும் அரக்கராலும் கையாளப்பட்டதேயன்றி நன்மக்களால் விரும்பப்பட்டதன்று. அவ்வொழுக்கம் தமிழ்நாட்டில் மிக அருகியே நிகழ்ந்தது. மூத்தாளையும் கள்ளுண்டாளையும் துயின்றாளையும் கூடுங்கூட்டம் பைசாச மணம் என விலக்கப்பட்டது. ஒத்தகாமத்தின் மிக்கும் குறைந்தும்வருதலால் ஆரியமணங்களாகிய பிரமம் பிராசாபத்தியம் ஆரிடம் தெய்வம் ஆசுரம் சுயம்வரம் என்பன தமிழ்நாட்டில் அருகியே வழங்கின. அரசர் அரசிளங்குமரரைக்கூவி அவர்களுள் விரும்பியோரைத் தேர்ந்துகொள்ளும்படி தம்மகளிரைக் கற்பித்தல் சுயம்வரம் எனப்படும். நளனைத் தமயந்தி சுயம்வரத்தாலடைந்தனளன்றோ! இந்துப்பெண்கள் சுதந்திரமுடையோர் எனக் காவியம் எழுதிய ஆசிரியர் கருதினர். சுயம்வரம் உலகவழக்கிலும் இருந்திருத்தல்கூடும். ஆயர்குலத்தார் கொடிய விடையைத்தழுவும் வீரனுக்குத் தம் மகளிரை வதுவைசெய்துகொடுத்தலும் உண்டு. இவ்விடைதழுவல் ஏறுகோடல் எனப்படும். கண்ணபிரான் நப்பின்னையை இங்ஙனம் மணந்தான். வில்வீரர் குறித்ததோர் இலக்கினை எய்து தலைவியைப்பெறுதலும் உண்டு. இவ்வண்ணம்

இராமன் சீதையைப் பெற்றனன் என வான்மீகி வருணித்த னர். கொல்லேறுகோடலும் வில்லேற்றுதலும் ஆசுரம் என வழங் கப்பட்டது. வேள்வியாசான் வேதவிதிப்படி அங்கியங்கடவுள் சான்ருக, "நீ இவளை இங்ஙனம் பாதுகாக்க, நீ இங்ஙனம் இவருக் குக் குற்றேவல்செய்க" என்ருற்போன்ற இல்லொழுக்கத்திற்குரிய இலக்கணங்களைத் தலைவன் தலைவியர்க்குத் தந்தைதாயரின் விருப் பப்படி கற்பித்து மணமுடித்தல் பிராசாபத்தியம் எனப்படும். 48 யாண்டு பிரமசரியங்காத்தானுக்குப் பன்னீராட்டைப்பிராயத் தாளைப் பூப்பெய்தியபின் வேதவிதிப்படி விவாகஞ்செய்வித்தல் பிரமம் எனப்படும். தக்கான் ஒருவனுக்கு ஆவும் ஆனேறும் பொற் கோடும்பொற்குளம்பும் உடையனவாகச்செய்து அவற்றினிடையி லே பெண்ணை நிறுத்தி அவைபோற் பொலிவீராகவென வாழ்த் தித் தானமாகக்கொடுத்தல் ஆரிடமாகும். வேள்வியாசானுக்குக் கன்னிகை அலங்கரித்துத் தீமுன்னர்க்கொடுப்பது தெய்வம் எனப் படும். மேற்கூறிய ஆரியமணங்கள் தமிழ்நாட்டிற் புகுந்த ஆரிய ராற் கையாளப்பட்டன. ஒத்தஅன்புடையராகிய தலைவனும் தலைவியும் தெய்வீகமாகக் கண்டு கூடுதல் கந்தருவம் என ஆரிய ரால் பாராட்டப்பட்டது. துஷ்யந்தன் சகுந்தலையைக் கந்தருவ முறையாக மணந்தான் எனக் காளிதாசர் வருணித்தனர். இக் கந்தருவமணத்தைத் தமிழர் களவுமணம் எனவும் மணங்களுட் சிறந்ததெனவும் உயர்ந்தோருடைய மணமெனவும் சிறப்பித்தனர். இம்மணமுறையையே மேனுட்டார் பெரிதும் தழுவுகின்றனர். தமிழ்மணமாகிய களவொழுக்கம் ஆரியரால் கண்டிக்கப்பட்டுப் பிற்காலத்தில் தமிழ்நாட்டில் வழக்கற்றது. உலகவழக்கற்றபோதி லும் இக்களவே தமிழ்நூல்களில் இன்றும் பேசப்படுகிறது.

அகவொழுக்கம்

உருவாலும் திருவாலும் குலத்தாலும் குணத்தாலும் அறிவா லும் அன்பாலும் ஒத்த தலைவனும் தலைவியும் தெய்விகமாக ஒருவ ரையொருவர் சந்தித்துக் கூடுதல் களவெனப்படும். தலைவனெரு

வன் வேட்டையாடித் தமியனாக, மலைச்சாரலில் வந்து, அவண் தினைப்புனங்காத்தும் தம் தோழியரோடு விளையாடியும் தமியளாகப் பூக்கொய்தும் இன்புற்றிருக்கும் தலைவியை எதிர்ப்பட்டு "அணங்கு கொல் ஆய்மயில்கொல் கனங்குழைமாதர்கொல்" என ஐய முற்றுத் தேறி, வண்டோச்சி மருங்கணைந்து புணர்ந்து பிரிந்து பின்னரும் அம்மெய்யுறுபுணர்ச்சியை விரும்பித் தன் பாங்கரின் உதவியாலும் தோழியரின் உதவியாலும் பகற்குறி இரவுக்குறிகளை உணர்ந்து தலைவியுடன் பிறரறியாமற் கூடுதல் களவொழுக்கமாகும். இவ்வொழுக்கம் அலராயின் தலைவி இற்செறிக்கப்படுவள். தலைவி அதற்கு ஆற்றாது இறந்துபடுவள் எனத் தோழியால் உணர்த்தப்பெற்ற தலைவன் தோழியரிடம் வரைவுகடாவி அவருதவியால் தலைவியின் சம்மதம்பெற்றுத் தன்னிலத்திற்குப் பிறரறியாமல் அவளைக்கூட்டிச் செல்லுதல் உடன்போக்கெனப்படும். பின்னர் இருவர்பெற்றோரும் மனமுவந்து தலைவன் தலைவியரை இல்வாழ்வில் இருக்கச்செய்தல் கற்பியல் எனப்படும். களவொழுக்கத்திற் கூடல் குறிஞ்சியெனவும் ஊடல் மருதமெனவும் ஆற்றியிருத்தல் முல்லை எனவும் பிரிதல் பாலையெனவும் இரங்கல் நெய்தல் எனவும் ஐவகை ஒழுக்கங்கள் வகுக்கப்பட்டன. பரத்தையரை விரும்பியும் பொருள்தேடும்நோக்கமாகவும் ஓதல்காரணமாகவும் அரசியற்சேவைப்பொருட்டும் தலைவர் தம் தலைவியரைப் பிரிதல் உண்டு. இனிக் காமத்தீயால் வருந்தும் மகளிரை மூடச் சனங்கள் பேய்கோட்பட்டாள் என எண்ணிக் குமரக்கடவுளின் பூசாரியாகிய வேலனை அழைத்துப் பார்ப்பித்தல் வெறியாடல் எனப்படும். காமமுணராச் சிறுமியைக் காதலித்தல் கைக்கிளை எனப்படும். அது ஒருதலைக்காமம் எனவும் பெயர்பெறும். நங்கையொருத்தியின் உருவிலும் திருவிலும் மயங்கிய ஒருவன் அவளன்பைப் பெற்றிலனாயின் வரைபாய்ந்திறத்தலும் உண்டு. காதலியின் காதலைப்பெறாத காதலன் தான் மடலேறுவதாக அறிவிப்பன். மடலேறுவோன் திகம்பரனாய் உடலெங்கும் நீறுபூசித் தானே அவளுருவத்தைக் கிழியிலே தீட்டித் தன்னையும் எழுதிக் கைப்பிடித்து

ஆகாரநித்திரையின்றி அக்கிழிமேற் பார்வையும் சிந்தையும் இருத்தி வேட்கைவயத்தனாய் வேறுணர்வின்றி மழை வெய்யில் காற்றுக்கு அஞ்சாதுநிற்பனென்பர். அரசனேனும் ஊர்ப்பெரு மக்களேனும் அங்ஙனம் மடலேறுவோனுக்கு அத்தலைவியை மணம் பேசித் தலைவியின் பெற்றோர்சம்மதத்தைப் பெற்றுக்கொடுப்பர். மடலேறிய ஒருவனை ஒருத்தி மறுத்தாளாயின் பின்பு அவளை ஒருவரும் மணஞ்செய்யார்.

இதுவரையும் களவுமணம் தமிழ்நாட்டிற் பெருவழக்காயிருந்த தெனவும் அதே சிறந்தமணமென உலகவழக்கிலும் செய்யுள் வழக்கிலும் பாராட்டப்பட்டதெனவும் தமிழ்ப்போர்முறைகளே தலைசிறந்தவையெனவும் தமிழர்தத்துவநூலாராய்ச்சியிற் சிறந்து ஒருதனிக்கடவுளாகிய சிவனை வழிபட்டனரெனவும் ஆரியரின் ஒழுக்கங்களைப்பற்றாது தம்மொழுக்கத்திறனையுணர்ந்து இறுமாப் புடையராயிருந்தனரெனவும் கூறினோம். இனித் தமிழ்மக்களோடு கலந்து அவர்களின் ஒழுக்கங்களைத் திரிபடையச்செய்த ஆரியரின் ஆதிவரலாற்றை ஆராயத்தொடங்குமுன் கடைச்சங்ககாலத் தமிழ ரின் நாகரிகத்தை ஆராய்ந்து கூறுவோம்.

[தொடரும்.]

உ

கம்பராமாயணசார சம்பந்தமான

குறிப்பு

[செந்தமிழ் தொகுதி ௩௧, பகுதி ௨, பக்கம் ௭௮ பார்க்க.]

கம்பராமாயணசாரம் மூலபலவதைப்படலத்தில் 'ஆனை யாயிரம்' என்ற பாட்டில், 'சேனை காவலர் ஆயிரம் பேர்படிற் கவந்த மொன் றெழுந்தாடும்' என்ற இரண்டாமடியில் மோனையில்லை யென்று எழுதியிருந்தேன். பின்பு, கீழ்வரும் பாட்டு ஞாபகத்துக்கு வந்தது. அதன்படி 'சேனை' என்பதில் உள்ள 'சே' என்ற எழுத்துக்கு 'றெழுந்தாடும்' என்பதில் உள்ள 'றெ' என்ற எழுத்து மோனையாகும். அப்பாட்டு வருமாறு:—

கற்கிணற்றி லாறுவரக் காட்டவல்ல கண்ணுளி
தெற்கில் வடக்கினின்று சென்றுலென்—முற்கிளர்ந்து
வேலனெனை நான்மதிக்க வேண்டுமது செய்கவுண்மைச்
சீலர்பதத் தூள்சுமக்கின் றேன்.

இறுதி யடியிற் 'சீ'க்கு 'றே' மோனை.

இந்தப்பாட்டின் வரலாறு விநோதமானது. அதனைக் கீழே தருகின்றேன்:—

இந்தப்பாட்டைப் பாடியவர், தண்டபாணிப் பரதேசி யென்ற முருகதாசசுவாமிகள். இவர், அருணகிரிநாதரினும் சிறந்த சந்தக் கவிஞரெனப் பேர்பெற்றவர்; புலவர்புராணம் முதலிய பலநூ லியற்றியவர்.

இவர் எவ்வளவு பிடிவாதமும் மனவோர்மையும் உடையரா யிருந்தாரென்பது, ஒருசமயம் தம் பிரார்த்தனை நிறைவேறாமை யால், பிராணத்தியாகஞ்செய்யத்துணிந்து, தென்காசித்தாலூகாவி லுள்ள திருமலையென்ற குன்றினுச்சியிலிருந்து உருண்டுவிட்டத னால் விளங்கும்.

திருமலையி லேறியதன் முகடதிர வீழுமொரு
தினமழிவு ருதுபுரி தண்ணரு ளொய் யாரனே.

என்ற இனிய வண்ணப்பகுதியில் மேற்கூறிய அபூர்வ அதிசய நிகழ்ச்சி குறிப்பிடப்பட்டிருப்பது காண்க. இவர், திருநெல்வேலியிலிருந்து வடக்குநோக்கித் தச்சநல்லூருக்குச்செல்கின்ற சாலைக்குக் கிழக்குப்பக்கத்தில் ஓர் ஆச்சிரமம் அமைத்து, அதில் வசித்துக் கொண்டிருந்தபோது, ஒரு கிணறு வெட்டுவித்தார். அது, மிகுந்த ஆழம் வெட்டப்பட்டபின், அடியில் ஒரே கருங்கற்பாறையாயிருந்தது. இவர் பிடிவாதமாகப் பாறையைப் பெரும்பணஞ்செலவிட்டுச் சுரங்கம்வைத்துப் பேர்த்துப்பார்த்து, மேற்கொண்டு செலவுசெய்ய மாட்டாமல் அந்தக்கிணற்றுவேலையை முடிவாக நிறுத்தமனமில்லாதவராய்த் தாற்காலிகமாக நிறுத்திவைத்திருந்தார். அந்தச் சமயத்தில், மேற்குறித்த பாட்டைப் பாடி ஆச்சிரமக்கட்டிடத்தின் மேற்குச்சுவரில், அந்தச் சாலைவழியாகத் தெற்கேயும் வடக்கேயும் செல்வாரெல்லாரும் பார்க்கும்படியாக, எழுதியிருந்தார். நான் திருநெல்வேலியிலிருந்து தச்சநல்லூருக்குப்போன பலசமயங்களில் அந்தப்பாட்டைப் பார்க்கநேர்ந்ததனல், அதை மனனஞ்செய்ய முயலாமலே, அது எனக்கு மனப்பாடமாயிருந்தது.

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்,

ஸ்ரீ:

இராமசெயம்

[இராமாயணத்திருப்புகழ்]

உத்தரகாதை

(கக௨-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

தேவனுநீ தொண்டு கட்டு
மாகுருநீ நண்பு வைத்த
சீவனுநீ தந்தை சுற்ற முதலோர்நீ
சேர்பொருணீ நந்தெ ரிக்கு
கானனுநீ மண்டி ருட்கொர்
தீபமுநீ வந்............ துணை தானீ
காவலனீ பெங்கள் குற்ற
மானவை யாவும்பொ றுக்கை
காரியமே யென்றி ருக்கை யுரியாய்நீ
காணவொணு நின்ச ரித்ர
வேலையிலா டும்ப டிக்கொர்
காரணமா மிங்கெ மக்கு நிகர்யாரோ
ராவணனே வும்ப்ர கத்த
னீடுகுபே ரன்ப திக்கு
ளேகிமுனே சென்று வெற்றி யிளவீரன்
நாமுதல்வா மூந்த லத்தை
நீவிடு ....ப்பி
லேகவிடே னென்பொ டிப்ப னெனவோதி
வாவெனவே யின்று விட்ட
தூதனும்யா னென்று ரைப்ப
வாழ்வுடனே லங்கை விட்டு நிதியாள்வான்
மாதவர்தா .... விட்டு
மேவினர்கா ணென்ற தெற்கு
வாழ்மலையா னன்பு தித்த பெருமாளே. (19)

மயக்கமி குந்து கோபமி குந்தும்
அலக்கணி றைந்து காமம்வ ளர்ந்தும்
மதத்துறை விஞ்சி ராசத முந்தி மிகுலோப
வகைப்பட நின்று நீர்மையி ழந்து
புலைத்தொழின் மண்டி யேழைமை கொண்டு
மடிக்குணம் வந்து மாயமும் வஞ்ச னையும்வீறித்
துயிற்படு கின்ற பாவியு மம்பொ
னடித்துணை யின்க ணுள்வி ருப்பல்
சுகப்பிழை யென்று நாணுதல்...... பகையோமுன்
துதித்திடு மன்பர் தாமிது கண்டு
வெறுப்பர்க ளென்ப தோவினை யின்று
துரத்திய தென்கொ லாவிது கிஞ்சி தறியேனே
இயக்கனெ ழுந்து தாதை பதங்கள்
வழுத்தி வணங்கி ராவணன் வந்தெ
னிருப்பை வளைந்து சீறின னென்று முதலோத
எமக்கவன் மைந்தன் வேலையி லங்கை
யாக்கரு றைந்த மாநகர் பண்டி
மயக்கிரி யின்க ணேகுதி யென்று முனிகூற
வியப்புட னன்று பேரனெ ழுந்து
வடக்கிட வன்று கோவென வந்த
விருத்தரொ டும்பர் தாபமி குந்த நிருதேசன்
விருப்பொடி லங்கை யானசி லம்பி
லடுத்தன னென்று நான்முகன் மைந்தன்
விரித்திடு பண்பு சேரவி ளங்கு .... பெருமாளே. (20)

சேறபடா தெழுந்து விடுபுழு
நீறபடா தெழுந்து விடுகழல்
சேர்புனலூ டுறைந்து வருகிடை யிவைபோலே
தீதறவே பறந்து துறைதொறு
மூடுறவே துளைந்து மவையவை
சேரவுமே துறந்து கடைவழி யுனைநாடும்

பேறுடையா ரையின்று முழுகிய
சீருடையா ரையண்டர் களுமகிழ்
........பேருடையா ரையுன்ற ன்டிதொழ வுரியாரைப்
பேதமிலா ரைமண்டு மருவினை
வாதையிலா ரையன்றி யெனெநிகர்
பேயரையே கா.................... ளெனதாமோ
வீறுடனே யிலங்கை யதிபதி
மாமுடிகூ டியன்பி னிளையவள்
வீரியனு னசிங்கி............ மேவ
மேலொருநா ளின்மண்ட வுதரியை
யாதரவோ டுகொண்டு மயனருள்
வேலுடனே யிருந்து குலவின னடல்வீர
மாறுபடா துகும்ப கருணனும்
நீள்வயிரோ சனன்றன் மகளுடன்
மாமணமே புணர்ந்து மருவின னிளவீரன்
வாளையிலு ணர்தந்த சயைதனை
மேவினன்மே லுமுண்டு கதையென
வாரிதியூ ணர்நன்று சொலமகிழ் பெருமாளே. (21)

உண்டுமி ழெஞ்சில்செ கத்ரையம் யாவையும்
விஞ்சிய வெஞ்சிலு ரைப்பவன் மானவ
ருந்தியர் சங்கரர் மற்றுள வானவ ரிவர்மேன்மை
யொன்றைவி ளம்பிலு மட்சயம் யானினி
யிங்கிவர் தங்கள் விளைப்பினி லேமன
மொன்றிய நந்தமு கத்துமெ னுருயிர் தடுமாறிப்
பண்டிடு......தென்கட விற்கழி தான்வட
தெண்டிறை தங்கு நுகத்துளை நேர்வழி
பண்பொடு சென்றதெ னத்துள வேறுநி னிருபாத
பங்கய மின்றுநி னைத்ததென் மாமன
மிங்கிது பின்புக ழிற்றுவி டாதொரு
பந்தமு றும்படி நற்க்ருபை யானது புரிவாயே

பூண்டுகு லாவ வினிய வகிலொடு
சாந்துகள் பூச விரையின் வகைவகை
பூந்துகி லாடை புனைய வெயர்வுக ளடையாதே

பூம்புன லாட வினிய வடிசிலு
மாந்திட மாதர் தெருவி லழகொடு
போந்திட மேலு மவரை யுயிரென விளையாடித்

தீண்டிவி னோத சரத கலவிகள்
பூண்டிட வேறு மினைய வகைபல
தேர்ந்திடு பாவி மனமு முருகியு னடிமீதிற்

சேர்ந்திடு மோவு னடிய ரெனவருள்
கூர்ந்திடு மோவெ னெடிய கொடுவினை
தீர்ந்திடு மோபின் விளையும் விளைவுக ளறியேனே

நீண்டகை யூடு நிருதன் மலைதனை
யேந்திய போது சிவனு மொருவிர
னோர்ந்திட வீர நிருதன் வலிகெட வமன்வீழா

நீங்கரி தாகி மறையை யிசையுட
னூண்டுக ளாயி ரமரு வினைகளை
நீங்கிமு னோத விறையு மவனுழை யருள்கூரா

வேண்டிய வாளும் வலியு மரையுடன்
மூன்றொரு கோடி வருட மளவுயர்
மேம்படு வாழ்வு முதவி நடவென விடுபோது

வேந்தனும் வேக வதியை நினைதவ
பூந்தவ மானை வலிது சருவினன்
மீண்டென நீடு பொதியர் சொலமகிழ் பெருமாளே. ( )

[தொடரும்]

T. K. இராமாநுஜையங்கார்,
உதவிப்பத்திராசிரியர்.

உ

'ஐயமகற்றல்'-ஆராய்ச்சி.

(செந்தமிழ்த்தொகுதி ௩௮, பக்கம் ௫௬௯—௭௧. ஷை ௩௯, பக். ௯௭—௧௦௪.)

1. நடராசனுன கயிலாசநாதன்முன் நடித்த தேவமாதர் 'நாடகத் தலைவர்க் கெதிரடி யேங்கள் நடிப்பதற் கஞ்சுதும்'* என்றவாறு, தலைசிறந்த நியாயவாதியான திரு. S. S. பாரதியவர்கள்முன், 'ஐயமகற்ற'லைப்படித்தபின்பும் 'வந்தெதிரே' யென்ற பாட்டின் புதியவுரை சிறந்ததென என்மனத்துத் தோன்றிய நியாயங்களை அச்சத்தோடு தெரிவிக்கின்றேன்.

2. பழையவுரையும் புதியவுரையும் ஒன்றுக்கொன்று சில அமிசங்களில் வேறுபாடுடையனவாயினும், இரண்டுரைகளுக்கும் பாட்டு† இடந்தருகிறதென்பதும், பழையவுரை உடலோடு தொடர்புடைய சாதியுயர்வுதாழ்வைப் பிரதானமாகக்கொண்டதென்பதும், புதியவுரை உளத்தோடு சார்புடைய அன்பை முக்கியமாகக் கொண்டதென்பதும், உளநிலை உடல்நிலையினும் சிறந்ததுபோலப் புதியவுரை பழையவுரையினுஞ்சிறந்ததென்பதும், பாட்டின் சொற்கிடக்கைமுறைப்படி புதியவுரை அதிக இயல்பானதென்பதும்

---

* காஞ்சிப்புராணம் தலவிசேடப்படலம். அ.

† வந்தெதிரே தொழுதானை வணங்கினுன் மலரிருந்த
அந்தணனுந் தனைவணங்கு மவனுமவ னடிவீழ்ந்தான்
தந்தையினுங் களிகூரத் தழுவினுன் நகவுடையோர்
சிந்தையினுஞ் சென்னியினும் வீற்றிருக்குஞ் சீர்த்தியான்.

பழையவுரைக்கருத்து, கைகூப்பித்தொழுதுகொண்டு தன்னெதிரேவந்த குகனைப் பரதன் கைகூப்பித் தொழுதான். குகன் பரதன்காலில்விழுந்து தெண்டனிட்டான். பரதன் குகனைத் தழுவினுன் என்பது.

புதியவுரைக்கருத்து, குகன் தன்னெதிரே கைகூப்பித்தொழுத பரதனைக் காலில்விழுந்து தெண்டனிட்டான். பரதனும் குகன்காலில்விழுந்து தெண்டனிட்டான். குகன் பரதனைத் தழுவினுன் என்பது.

(‘செந்தமிழ்’ தொகுதி ௩௮, பக்கம் ௫௬௯ பார்க்க.)

என் அபிப்பிராயம். பழையவுரையை அனுசரித்துப் பதவுரையெழுதிய ஸ்ரீ. வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியாரவர்களே, புதியவுரைசம்பந்தமாக விசேடவுரையில் 'இப்பாட்டின் சொற்போக்கை நோக்குமிடத்து (குகனும் பரதனுக்கு எதிரே வந்து, தொழுதானை—இராமனைத்தொழுபவனான பரதனை, வணங்கினான்; சீர்த்திமானாகிய அந்தணனும் தனைவணங்கும் அவனும் [பரதனும்] அந்தக் குகனது அடியில்வீழ்ந்தான் எனப் பொருள்கொள்ளுதல் நேராம். ஆயினும், அது, முதனூலாகிய ஸ்ரீ வான்மீகிராமாயணத்தோடு ஒவ்வாமையால், அங்ஙனம் உரைகூறப்படவில்லையென அறிக' என்று எழுதியிருக்கின்றார்கள். (அடிக்கீற்றுகள்மட்டும் என்னுடையவை). சீதையை இராவணன் தொட்டுத் தூக்கிச்சென்றானென்று வான்மீகி கூறியிருப்பதற்கு மாறாக, தொடாமல் பன்னசாலையோடு பேர்த்தெடுத்துப்போனானென்றதுபோன்ற, தம்காலத்துக்கு ஏற்பக் கம்பர் மாற்றிக்கூறிய வாலாற்றுச்செய்திகள் பலவுளவென்பது பிரசித்தம். ஆதலால், வான்மீகிகூறிய குக பரதர் சந்திப்புக்கும் கம்பர்கூறிய குக பரதர் சந்திப்புக்கும் மாறுபாடிருப்பது பற்றி நேரான உரையைத் தள்ளி நேரல்லாதஉரையைக் கொள்ளுதற்கு அவசியமில்லை.

3. பின்வருவது, கம்பராமாயணசாரம் அயோத்தியாகாண்டம் 181-ஆம் பக்கத்தில் உள்ள 'வந்தெதிரேதொழுதானை'யென்ற பாட்டின் முன்னிரண்டடிப்பொருள். அதில், ( ) இந்த இருதலைப்பிறைகளுக்குள்ளிருப்பவையும் அடிக்கீற்றிடப்பட்டவையுமான பகுதிகள், விளக்கத்துக்காக, இப்போது புதியனவாகச் சேர்க்கப்பட்டவை. அப்பொருளாவது:—

4. குகன் (கைகூப்பித்தொழுதுகொண்டு*) வந்து (தனக்கு) எதிரே (தன்தொழுதலுக்கு எதிர்தொழுதலாகக்) கைகூப்பித்

---

* கைகூப்பித்தொழுதுகொண்டு என்பது கம்பராற் கூறப்படவில்லையாயினும், பொருத்தம்பற்றி வருவிக்கப்பட்டது. நிகழ்ந்ததாகக்கூறப்படாதது அவசியமாக நிகழாததாகாது. 'குகன் பரதனெதிர் தொழுதுவருதலே இயல்பும் மரபும் எழிலுற இயையும் செயலாமென்பது தேற்றமாகும்.' (ஓர் எதிருரை, செந்தமிழ்த்தொகுதி ௯அ; பக்கம் ௪௧௯, வரிகள் ௧௬-௧அ.)

தொழுத பரதனைக் காலில்விழுந்து வணங்கினான். பிரமதேவனும் அடிபணியும் பெருமையுடைய பரதனும் (குகன் தன்காலில் வீழ்தற்கு எதிர் காலில்வீழ்தலாகக்) குகன்காலில்வீழ்ந்தான் (என்பது.)

5. 'வந்தெதிரே' யென்ற மேற்குறித்த பாட்டின் இரண்டாமடியில் 'அவனுமவனடிவீழ்ந்தான்' என்பதிலுள்ள உம்மையால், முதலடியிலுள்ள 'வணங்கினான்' என்ற பதத்திற்குக் 'காலில் விழுந்து வணங்கினான்' என்று பொருள்கொண்டனர் புதியவுரைகாரர்.

6. 'மீட்டும் மண்ணதனில் வீழ்ந்தான்' என்பது, குகன் இதன்முன் மண்ணில் வீழ்ந்திருக்கிறானென்பதைக் குறிக்குமேயன்றிப் பரதன் மண்ணில்விழவில்லையென்பதற்கு ஆதாரமாகாது.

7. 'தழுவின புளிஞர்வேந்தன்' என்பதில், 'தழுவின' என்பது, முதற்படியாகக் குகன்வினையாகக் கொள்ளற்பாலது. அடுத்தபடியாகத்தான், வலிந்து பிறன்வினையாகக் கொள்ளப்படலாம். பிற பிராணியைக் கொன்ற புலியென்பது முதற்பொருளாகவும் பிற பிராணியாற்கொல்லப்பட்ட அல்லது பிற பிராணி கொன்ற புலியென்பது அடுத்த பொருளாகவும் உள்ள 'கொன்றபுலி' யென்பதிற் 'கொன்ற' என்பது முதலாவதாகத் தன்வினையாயிருப்பது போலத் 'தழுவின' என்பது முதலாவதாகத் தன்வினை (குகன் வினை)யாகக் கொள்ளற்பாலதாயுள்ளது.

8. வான்மீகி, பரதன் தாதியரைத்தொழுதானென்று எங்கும் கூறுதிருக்கக் கம்பர், மீட்சிப்படலத்தில் 'வேதியர் தமைத் தொழும்' என்ற உருரு-ஆம் பாட்டில், பரதன் தாதியரைத் தொழுதானென்று கூறியிருக்கிறார். பரதன் உவகைமேலீட்டால் தாதியரைத்தொழுதானென்ற கம்பர், 'கேட்டனன் கிராதர்வேந்தன்' என்று தாம் விதந்துசுட்டும் குகன்காலிற் பரதன் அன்புமிகுதியால் விழுந்தானென்று கூறினாரென்பது பொருந்தாததாகாது.

9. அரசவமிசத்தினரல்லாத சேனாபதிகளான நீலன் அநுமான் சாம்பவான் முதலியோரைச் சகோதரராக உறவு

பாராட்டாத இராமன், (விபீடணனடைக்கலப்படலத்திற் 'குக னொடு மைவரானோம்' என்ற கசசு-ஆம் பாட்டுப்படி) இராசகுலத் தினரான குகன் சுக்கிரீவன் விபீடணனென்பாரைமட்டுமே சகோதரராகச் சுவீகரித்திருக்கிறான். குகன் குலத்தால்மட்டு மன்றி அரசாளுதலாலும் வேந்தனென்பது குறிக்கத்தக்கது. ஆத லால், குகன்காலிற் பரதன் வீழ்ந்தானென்று உரைகூறியவர்கள் சாமானியப் 'பண்பிலிவேடன்'காலிற் பரதன் வீழ்ந்தானாகக் கூறியவ ராகக் கொள்ளல் நியாயமாகாது.

10. கம்பர் நிகழ்ந்தனவாகக்கூறியவற்றை நிகழ்ந்தனவாகக் கொள்ளலாமேயன்றி, அவர் கூறாதுவிடுத்தவை நிகழவில்லையென்று கொள்ளல் முறையன்று. மந்திரப்படலத்தில், தசரதன் ஆலோசனை மண்டபத்திலமர்ந்து, 'மந்திரக் கிழவரை வருகென் றேவினான்': 'மூவரு நால்வராம் முனிவந் தெய்தினான்'. வந்த வசிட்டமுனிவ னைத் தசரதன் அடிதொழுததாவது கைதொழுததாவது கூறப்பட வில்லை. ஆயினும், தசரதன் வசிட்டனைத் தொழுதிருப்பானென் பது திண்ணம். பரதன் தாயர் மூவரையும் குகனுக்கு அறிமுகஞ் செய்வித்தபோது, குகன் கோசலையையும் கைகேயியையும் தொழு தது கூறப்பட்டிருக்கிறது. சுமித்திரையைத் தொழுதது கூறப்பட வில்லை. ஆயினும், குகன் சுமித்திரையைத் தொழுதிருப்பானென் பது நிச்சயம். மீட்சிப்படலத்தில், சுக்கிரீவன்முதலியோரும் குக னும் ஒருவரையொருவர் தழுவியது கூறப்பட்டிருக்கிறது. வணங்கி யது கூறப்படவில்லை. ஆயினும், அவர்கள் ஒருவரையொருவர் வணங்கித் தழுவிக்கொண்டாரெனக் கொள்ளல் மிகையாகாது. இலக்குமணன் தன்காலில் விழுந்து வணங்கின குகனை (வணங்குவ தும் கைகூப்புவதும் கிடக்க,) தழுவுதல்செய்தான் என்பதுகூடக் கூறப்படவில்லை. அதைக் கம்பர் கூறாதுவிட்டதனால், அது நிகழ வில்லையென்றுகொண்டால், காலில்விழுந்த குகன் திறத்தில், இலக்குமணன் கோயில்விக்கிரகங்கள்போல வணக்கத்தையேற்றுக் கொண்ட குறியொன்றுங் காட்டாதிருந்தானென்றும் அதனால் செயற்குரியசெய்யாத சிறியோரினத்தைச் சேர்ந்தவனென்றும் கொள்ளவைத்தார் கம்பரென்று குற்றங்கூறுதற் கிடமாம்.

11. செந்தமிழ்த்தொகுதி ௩அ, ௰சுரு-ஆம் பக்கத்தில், இராமன் மகாவிட்டுணுவின் அவதாரமென்ற ரகசியம், அவன்காலத்திலே தேவர் முனிவ ரல்லாத யாவராலும் அறியப்படாததென்று திரு. பாரதியவர்கள் கூறியிருக்கிறார்கள்; இராமன்காலத்திலேயே அந்த ரகசியம் அறியப்பட்டதென்றால், அதற்குச் சான்றுகூறி நாட்டும்படி செந்தமிழ்ப்பத்திராசிரியரை அறைகூவியிருக்கின்றார்கள். உண்மையில், அந்த ரகசியம் அந்தரங்கரகசியமாயில்லாமல், இராமன்காலத்தாருக்குப் பகிரங்கரகசியமாயிருந்தது. குகப்படலத்தில், பரதன் கோசலையை இன்னாளெனக் குகனுக்குத் தெரியச் செய்யுமுகமாக, 'வேந்தர்வைகும்—முற்றத்தான் முதற்றேவி மூன்றுலகு மீன்றானை முன்னீன்றானைப்—பெற்றத்தாற் பெறுஞ் செல்வம் யான்பிறத்த லாற்றுறந்த பெரியா ளென்றான்.' இதனால் பரதனேயன்றிக் குகனும் இராமன் மகாவிட்டுணுவின் அவதாரமெனத் தெரிந்தவனாகின்றான். மாராமரப்படலத்தில் 'சங்குசக்கரக் குறியுள' என்ற ககஎ-ஆம் பாட்டில் அனுமான் சுக்கிரீவனைநோக்கிச் 'செங்கண்விற்கரத் திராமனத் திருநெடு மாலே' என்று கூறியதும், மூலபலவதைப்படலத்தில் சரு-ஆம் பாட்டில் 'சாம்பனை வதன நோக்கி வாலிசேய் அறிவு சான்றோய்—பாம்பணை யமலனேமற் றிராமனென் றெமக்குப் பண்டே—எம்பல்வந் தெய்தச் சொல்வித் தேற்றினாய்' என அங்கதன்கூறியதும், இராமன் விட்டுணுவின் அவதாரமென்பதை இராமன்காலத்தில் எல்லாரும் அறிந்திருந்தார்களென்பதற்குச் சான்றுகளாம்.*

---

* இராமன் அவதாரபுருஷனென்பது பிற்காலவழக்கன்றென்பதைச் சங்கநூலாகிய சிலப்பதிகாரத்தும் 'தாதை யேவலின் மாதுடன் போகிக், காதலி நீங்கக் கடுந்துய ருழந்தோன் வேத முதல்வற் பயந்தோன் என்பது, நீயறிந் திலையோ நெடுமொழி யன்றோ' (ஊர்காண்காதை. 46–49 அடிகள்) என்று கூறுதலால் அறியலாம். இதனுள் இராமனை வேதமுதல்வற் பயந்தோனென்றும் அவன் சரிதத்தை நெடுமொழியென்றும் கூறுதல் ஊன்றி நோக்கத்தகும்.

12. துர்வாசமகாரிஷி, மகாலட்சுமிக்கு இசையெடுப்பவ ளென்பதுபற்றி, ஒரு பெண்மகள்காலில்விழுந்து வணங்கியதாக (அகலிகைப்படலத்தில் 'அன்னமாலையை'யென்ற சுஅ-ஆம் பாட்டில்) கூறிய கம்பர், பரதவேந்தன், மகாவிட்டுணுவின் அவதாரமான இராமனுக்குத்தோழன் என்பது காரணமாக, வேந்தனுன குகன் காலில் விழுந்துகும்பிட்டானென்று கூறியிருக்கவேமாட்டாரென்று திரு. பாரதியவர்கள் (செந்தமிழ்த்தொகுதி ௬அ, பக்கம் ருசுஎ, வரி எ-க0ல்) வற்புறுத்திக்கூறுவது* என் சிறுமதிக்குப் பெரு வியப்பை விளைக்கின்றது.

13. இராமாயணகதாபுருடரில், பரதலக்குமணசத்துருக்கர், இராமனைத் தமயனென்றும், சுக்கிரீவ விபீடணர் அவன் தமக்கு இராச்சியமடைதற்கு உதவுவானென்றும், அனுமனுதியோர் தம் அரசனுன சுக்கிரீவனுக்குப் பகையொழித்து அரசளிப்பானென் றும், இராமன்மாட்டு அன்புசெய்தவராவர். குகனெருவனே, பந்துத்துவமாவது பலாபேட்சையாவது காரணமாகவில்லாமல், கலப்பற்ற அதிபரிசுத்தமான அன்பே காரணமாக, இராமனுக்கு அன்புசெய்தவனுவன்.

14. திரு. பாரதியவர்கள், 'ஐயமகற்றல்' முதற்பாராவில், 'மற்றெருசாராரில்' என்னையும் சேர்த்தார்களோவென்று யான் ஐயுற்றது, அவர்களுக்கு வியப்பையும் வருத்தத்தையும் விளைத்த தாகக்கூறியிருக்கிறுர்கள். பரதன் குகன்காலில் விழுந்து வணங்கின னென்பாரை, 'ஓர் எதிருரை'யில், இருபிரிவினராகப் பிரித்து, ஒருபிரிவினர், ஒரு சில வைணவரான ஒரு சாராராகவும், மற்றெரு பிரிவினர், 'கடவுட்கொள்கையே மடனெனப்பழித்து வரிசையும் தாமும் வாழ்க்கைவேற்றுமைகளும் அறவே ஒழித்து மகிழும் மற் றெருசாரார்' ஆகவும் உள்ளாரென விவரித்திருக்கின்றுர்கள்.

---

*'ஏதோ ஒருசிலர்மனத்தால் பரதனைக் குகன்காலில்வீழ்த்தி மகிழ விரும்பில் தடுப்பவர் யாருமில்லை. எனில், தங்கொள்கையைத் தமுக்கடித்துச் சங்கூத அறமறிந்த தமிழ்க்கவியை ஆட்பிடிக்கமுயற்சிப்பாரை (முயல் வாரை) வாளாபார்த்திருக்கும் தமிழனுண்டோ?' (செந்தமிழ்த்தொகுதி ௬அ. பக்கம் ருசுஎ, வரி எ-க0.)

பரதின் குகன்காலில் விழுந்து வணங்கினனெனக் கூறியவருள் ஒருவனுன நான், வைணவனல்லேனுதலால், அவசியமாக மற்றொரு சாராரோடு சேர்க்கப்பட்டவனுகின்றேனென்பது மறுக்கமுடியாதது. ஆயின், என் உண்மைநண்பருட்சிறந்த ஒருவர் அப்படியென்னைச் சேர்த்திருக்கமாட்டாரென்ற எண்ணம் ஒருபக்கமும், வாக்கியங்களிருக்கிறபடிபார்த்தால் சேர்க்கப்பட்டேயிருக்கிறேனென்ற எண்ணம் மற்றொருபக்கமுமாக இழுக்க, இரண்டுக்கும் மத்தியான திரிசங்குசுவர்க்கம்போன்ற சந்தேகநிலையில், என்மனம் அலைப்புண்டு நிலைகொள்ளமாட்டாமல் தள்ளாடியது இயல்பே. என் நண்பரல்லாதார் யாராயினும் 'ஓர் எதிருரை'யை எழுதியவராயிருந்தால், அவர், என் கருத்துவேறுபாட்டைத் தாக்குதலோடமையாமல், அவர்கருத்தினின்றும் வேறுபட்ட கருத்துடைய என்னையும் தாக்கினுரென்பதில் எனக்கு இம்மியும் சந்தேகமிருந்திராது.

15. திரு. பாரதியவர்களது உரைக்கு மறுப்பை அவர்களுக்கெழுதாமல் பத்திரிகைக்கெழுதியது அவர்களுக்கு வியப்பும் விசனமும் விளைத்ததாகக் கூறியிருக்கின்றுர்கள். அவர்களுக்கு விசனம் விளைந்ததுபற்றி வருந்துகின்றேன். என்உரை பத்திரிகையில் மறுக்கப்பட்டதனுல், அம்மறுப்புக்கு மறுப்பும் பத்திரிகையில் வெளியிடப்படுதலே முறையென்றெண்ணினேன்.

16. இரண்டாம்பாராவில் என் புதியவுரையிருப்பது தெரியாதபோது 'ஓர் எதிருரை' எழுதப்பட்டதென்பது தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது தெரிவிக்கப்படுமுன், மற்றொருசாராரில் என்னைச் சேர்த்தார்களோவென்று சந்தேகித்தேன். அதைப்பற்றியும் வருத்தமடைகிறேன்.

17. மூன்றும்பாராவில் 'கைகூப்பித்தொழுதல், காலில் விழுந்து தெண்டனிடுதல் என்ற இருபொருள்களுமுடைய பொதுவினைகளாகிய தொழுதலும் வணங்குதலும் என்று முன் தாம் கூருத குறிப்பொன்று கூட்டுகிருர்கள்' என்கிருர்கள். இவ்வாறு கூறுவதில், கூட்டியது நேர்மையன்றென்பது தொனிக்கின்றது. முன்

சொல்லியதோடு முரணுததாகவும் உண்மையானதாகவும் இருப்பதைக் கூறுவது, நேர்மையல்லாததாகாது. அன்றியும், கூட்டுதற்குக் காரணமில்லாதிருக்கவில்லை. அந்தக்காரணம், 'ஓர் எதிருரை' வெளியானதே.

18. 'இவ் விருவேறுவழிபாடும் (வணங்கல் தொழுதல் என்ற) ஒரு வாய்பாட்டால் இருவருக்கு ஒரேபாட்டிற் கூறி மயங்க வைப்பது தெளிவூட்டும் நற்புலமை மரபாகாது. கம்பர் அதைக் கையாளக் கருதகில்லார்' என்கிறார்கள். கம்பர் மயங்கவைக்க வில்லை; எவ்வாறெனில், விவகரிக்கப்பட்ட, 'வந்தெதிரே தொழுதானை' 'முறைமையினெய்தினர்' என்ற இரண்டுபாட்டுக்களில், முற்பாட்டில் இரண்டாமடியில் 'அவனுமவன் அடி வீழ்ந்தான்' என்பதிலுள்ள உம்மையால் முதலடியிலுள்ள 'வணங்கினன்' என்பதற்கு 'அடியில்விழுந்து வணங்கினன்'; என்ற பொருளைத் தெளிவாகப் பெறவைத்திருக்கிறார். பிற்பாட்டில் 'அறிவனை வணங்கித் தம் அரசையுந் தொழுது' என்றுவது, 'அறிவனை வணங்கித் தம் அரசனைத் தொழுது' என்றுவது கூறுமல், 'அறிவனை வணங்கித் தம் அரசைக் கைதொழுது' என்றதனுல் இருவகை வணக்கங்கள் செய்யப்பட்டனவென்பதைத் தெளியவைத்திருக்கிறார். அதாவது பிந்தியவணக்கத்தைக் கைதொழுதலென விசேடித்து முந்திய வணக்கம் கால்தொழலாமெனத் தெளியவைத்திருக்கிறுரென்பது.

19. மாதாவைப் பிதாவைக் குருமாரைத் தெய்வங்களை முனிவரை வணங்கல் அல்லது தொழுதல் என்னுமிடத்து, மாதா பிதா முதலிய சொற்குறிப்பால், வணங்கல் தொழுதல் என்ற பதங்கள், அடிபணிதலென்றபொருளை இயல்பாகக் குறிக்குமென்பது யாரும் ஒப்புக்கொள்ளுதற்குரியது. மேற்கூறிய மாதா முதலிய ஐவகையினருள் யாரையாவது ஒருவர் வணங்கினுரென்னுமிடத்துக் கையால் வணங்கினுரென விசேடித்துக்கூறுமல், வெறுமனே வணங்கினுரென்றுல், அந்த வணக்கம் காலில்விழும் வணக்கத்தைக் குறிப்பதாம். ஆதலால், 'அறிவனை (முனிவனும் குருவுமான வசிட்டனை) வணங்கி' என்பதற்கு 'வசிட்டனை அடிபணிந்து' என்று

பொருள்கூறுவதே பொருந்தும். மேற்கூறிய ஐவகையினருளொருவ னல்லாத அரசனைத் 'தொழுது' என்று கூறினால், அதன்பொருள் அடிபணிந்து, என்பதா? 'அஞ்சலித்து' என்பதா? என்று இயல் பாக உண்டாகும் சந்தேகத்துக்கிடங்கொடாமல், 'அஞ்சலித்து' என்ற பொருளே குறிக்கப்பட்டதென்பதை விளக்கக், 'கை தொழுது' என்றார். இப்பாட்டுச்சம்பந்தமாக ஏழாம்பாராவில் (செந் தமிழ்த்தொகுதி ந௨ பக். க0௧) அமைச்சரை 'அந்தண அமைச்சர்' என்கிறார்கள். அவர் இன்னசாதியினரென்பது கூறப்படவில்லை. அரசைத்தொழுதாரென்று கூறப்பட்டிருத்தலால், அவர்கள், பிறசாதியாரை அடிபணிதலோ அஞ்சலித்தலோ செய்யாத அந்தண ரல்லாதசாதிபாராவார். இதற்குச் சான்று, ('மறுமொழியில் வரு முரண்கள்' என்பதில், செந்தமிழ்த்தொகுதி ந௮. ருசு௪-ஆம் பக்கத்தில் உக-௨௩. வரிகளில்வரும்) 'தமைப் பிறர்வணங்கினும் தாம் எதிர்வணங்காமல் வாழ்த்தியமையும் செருக்கு ஆரியருள் முதல்வருணத்தாரின் தனிப்பெருமை' என்று கூறியிருப்பதாகும். 'பேரரசன் அருகிருக்க அவனடிபணியாது பிறர் யாரையும் அவன் முன்னே தெண்டனிடுதல் ஒப்புரவும் நன்மரபும் ஆகாது.' என் கிறார்கள். பேரரசனருகிருக்கும்போதும் அவனே அடிபணியும் பெருமையுடைய குருவை அடிபணிதல், 'ஒப்புரவும் நன்மரபும்' ஆனதே.

20. எட்டாம்பாராவில் 'அப்பாட்டளவில் அவ்வுரையைக் கொள்ளாத இவர்கள்' என்கிறார்கள். அப்பாட்டளவில் அவர் (வை. மு. கோ) உரையைக் கொள்ளாமைக்கு நியாயம் மேலே (இந்தக் கட்டுரை 2-ஆம் பாராவில்) கூறப்பட்டிருக்கிறது. 'மறுமொழியில்வருமுரண்கள்' என்ற கட்டுரையில் (செந்தமிழ் தொகுதி ந௮, பக்கம் ருசு௩, முதலிரண்டுவரி) 'தொழுதலும் வணங்கலும், அடிவீழாமல் ஒருவருக்கொருவர் கண்டாங்குச் செய்யும் உலகமரியாதையாகும்' என்கிறார்கள். இது சரியன்றென விளங்கும்படி 'மாதாவைப் பிதாவைக் குருவைத் தெய்வங்களை முனிவரை வணங்கல் அல்லது தொழுதல் என்ற இடத்து வணங் கல் தொழுதல் என்ற பதங்களுக்கு மாதாமுதலிய சொற்குறிப் பால் அடிபணிதல் பொருளாமென்பதை யாரும் ஒப்புக்கொள்வர்.'

என்று மேலே (19-ஆம் பாராவில்) கூறியிருக்கின்றேன். கலைக் கோட்டுமுனியையும் (திருவவதார. எச) விசுவாமித்திரமுனியையும் (கையடை. ச) கண்டபோது அடிபணிந்த தசரதன் தன் குல குருவாகிய வசிட்டமுனிவனைக் கண்டசமயங்களில் அடிபணிவானென்பது மறுக்கமுடியாதது. திருவவதாரப்படலம் முதற்பாட்டில் 'ஆயவ னொருபக லயனை யேநிகர், தூயமா முனிவரற் றொழுது' என்பதில் 'தொழுது' என்பது அடிபணிந்து என்ற பொருள்தந்து நின்றது. மந்திரப்படலம் ருகூ-ஆம் பாட்டில், (தந்தை குரு இவர்களை ஓரிடத்திற் சந்தித்தபோது தந்தையை வணங்குதற்குமுன் குருவை வணங்கும்) பரம்பரைக்கிரமப்படி (முதலாவதாகக் குலகுருவான வசிட்ட)மாமுனியை அடிபணிந்து (இரண்டாவதாகத்) தசரதனை அடிபணிந்தான் (இராமன்) என்ற பொருளுடைய 'மாதவன் றனை வரன்முறை வணங்கிவா னுழவன்—பாத பங்கயம் பணிந்தனன்' என்பது வருகின்றது. இதில் 'வணங்குதல்' 'பாதம்பணிதல்' என்பவை ஒருபொருள் குறித்தவை. இந்தப் பாட்டில்வரும் வணங்குதல் பாதம்பணிதல் என்பவையும் 'வந்தெதிரே' என்ற பாட்டில் வரும் "வணங்குதல்" "அடிவீழ்தல்" என்பனவும் 'முறைமையி னெய்தின' றென்றபாட்டில் வரும் 'வணங்க'லும், 'அடிபணித'லென்ற ஒருபொருள் குறித்தது,—'அவிழ்ந்தன தோன்றி; அலர்ந்தன காயா;—நெகிழ்ந்தன நேர்முகைமுல்லை;—மகிழ்ந்திதழ்,—விண்டன கொன்றை; விரிந்தகருவிளை' என்பதில் வரும் பலவினைகள் 'மலர்தல்' என்ற ஒருபொருள் குறித்தது போலும்.

21. ஏழாம்பாராவின் இறுதியில் 'கம்பர்கவியில் வணக்கச் சொல்லுக்கு அடிதொழும் பொருள் இன்றியமையாததெனக் காட்டினாலன்றி வெறும் வணக்கப்பொருளும் இனிதமையுமிடத்தில் அடிதொழும் பொருளுண்மையை வற்புறுத்தல் மிகையாகும்' என்கிறார்கள். அப்படிப்பட்ட கவி' அறிவனை வணங்கித் தம்மரசைக் கைதொழுது' என்பதடங்கிய 'முறைமையினெய்தி'யென்ற மந்திரப்படலத்துப் பதினான்காங்கவியாமென்று எடுத்துக்காட்டியதைத் தக்ககாரணமின்றித் தள்ளிவிட்டார்கள். அக்கவி, தக்ககாரண

மின்றித் தள்ளப்பட்டதென்பதற்குரிய நியாயங்கள்மேலே (19-ஆம் பாராவில்) எடுத்துக்கூறப்பட்டிருக்கின்றன. அதே மந்திரப்படலத்தில் மேலே (20-ஆம் பாராவில்) விளக்கிய கூக-ஆம் கவியில், இராமன் 'மாதவன்றனை வரன்முறைவணங்கி வாளுழவன்—பாதபங்கயம் பணிந்தனன்' என்பது கூறப்பட்டிருக்கிறது. இதில் 'வணங்கி' என்பதற்கு 'அடிபணிந்து' என்ற பொருள் இன்றியமையாதது. ஏனெனில், இராமன் தான் அடிபணிதற்குரிய வசிட்ட தசரதரிருவரில் பின்னவன் அடிபணியப்பெற்ற பெருமையுடைய முன்னவனுக்குக் குறைந்தவழிபாடாகிய கைதொழுவணக்கஞ்செய்து பின்னவனுக்கு உயர்ந்தவழிபாடாகிய கால்தொழுவணக்கஞ்செய்தானென்றால், அது, முன்னவனைக் குறைபடுத்திய அபசாரமாமென்பது.

22. பத்தாம்பாராவில் 'மூத்த வேட்டுவக் குகன்காலில் இளைய கோப்பரதன் வீழ்ந்தது வேளாண்குலத்து முதிய அப்பமூர்த்திகாலில் விப்பிரகுலத்துப் பிள்ளைப்பருவச் சம்பந்தமூர்த்தி விழுந்ததுபோலத் தக்கசெயலேயாம் என்பதில் மூப்பிளமை அடைமொழிகள் ஒப்பினும் பொருளினு மொன்றுமை வெளிப்படை' என்கிறார்கள். இதனால் உவமானத்திலும் உவமேயத்திலுமுள்ள ஒற்றுமைப்பொருள்களை முறைப்படுத்திக் கூறினேனில்லையென்பது கருத்தானால், அது நான் செய்த பிழையென்று ஒப்புக்கொள்கிறேன். 'மூத்த வேட்டுவக் குகன்காலில் இளைய கோப்பரதன் வீழ்ந்தது, முதிய வேளாண்குலத்து அப்பமூர்த்திகாலில் பிள்ளைப் பருவத்து விப்பிரகுலச் சம்பந்தமூர்த்தி விழுந்ததுபோலத் தக்க செயலேயாம்' எனத் திருத்திக்கொள்கிறேன். உயர்ந்த குலத்தினரும் குறைந்த வயசினருமான பரத சம்பந்தர், முறையே தாழ்ந்தகுலத்தினரும் முதிர்ந்த வயசினருமான குக வாகீசர் பாதங்களிற் பணிந்தார்களென்பது கருத்து. மூப்புடைமை கருதாது அப்பமூர்த்தி சம்பந்தமூர்த்திகாலிலும் உயர்குலமுடைமையைப் பொருட்படுத்தாது பிந்தியமூர்த்தி முந்தியமூர்த்திகாலிலும் அன்பு காரணமாக வீழ்ந்தார்களென்பது குறிப்பு.

23. 'முதிய அப்பமூர்த்திகள் பிள்ளைப்பருவச் சம்பந்தரை அவர் விப்பிரகுலத்துயர்வும் தருக்குஞானப்பெருக்கும் கருதிக் காணுந்தோறும் இளையபிள்ளையார்காலில் அப்பர் விழுந்து கும்பிடுவதே வழுவாத வழக்காமுய்ச் சேக்கிழார் காட்டிச்செல்வர். ஓரிடத்தும் சம்பந்தர் அப்பரடிவிழுந்த செய்திக்குறிப்பே இல்லை' என்கிறார்கள். ஆறுமுகத்தம்பிரான்சுவாமிகள் உரையோடு வெளியாகியிருக்கிற திருஞானசம்பந்தசுவாமிகள்புராணத்தில் 'அங்கணாரூர்' என்ற சகூச-ஆம் பாட்டுரையில் "தங்களிலன்பின் முறைமையாலே தாழ்ந்து வணங்கித் தனித்தனியே—ஒருவர்க்கொருவர் தம்முள்ளுதித்த அன்பின்வழித் தனித்தனியே நிலமுறை வணங்கி" என்பது காணப்படுகின்றது. (அடிக்கீற்றுமட்டும் என்னுடையது.)

24. 'ஓர் எதிருரை', 'மறுமொழியில் வருமுரண்கள்', 'ஐயமகற்றல்' என்ற மூன்றுகட்டுரைகளையும் முழுக்கவனத்துடன் படித்தபின்பும் பழையவுரையினும் புதியவுரை அதிகப்பொருத்தமானதென்று உறுதியாகக் கருதுகின்றேன்: அன்றேல், திரு. பாரதியவர்கள் ஓரிடத்தே (செந்தமிழ் தொகுதி ந அ, பக்கம் ௹௫கூ) 'தலையல்லார்கண்ணும் தோல்விகொளல் சால்பு' என்று கூறிய கொள்கையை அவர்களைப்போலவே கொண்ட யான், மிக்க கல்வியுடையராய்ப் பேராசிரியரான அவர்கள்பால், என் தோல்வியை ஒப்புக்கொள்ளுதலையும் என் பிழையைத் திருத்தியதற்கு நன்றியுணர்தலையும் தங்குதடையின்றி நன்கு தெரிவித்திருப்பேன்.

25. என்னுடைய பேரன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய பேராசிரியர் பாரதியவர்கள்வாதத்துக்கு—உண்மையின்பொருட்டாகவாயினும்—எதிர்வாதஞ்செய்யும்படிநேர்ந்ததற்கு உண்மையாக மனமார மிகவும் வருந்துகின்றேன்.

வெள்ளகால்,
25—1—1942. } வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

2000 ஆண்டுகட்கு முன்னிருந்த
தமிழ்நாட்டெல்லை

[நல்லூர், சுவாமி. ஞானப்பிரகாசர்]

பரதகண்டம் முழுதும் ஒருநாள் தமிழ்நாடாய்விளங்கியமை இக்கால ஆராய்ச்சியால் இனிது பெறப்படுகின்றது. தமிழிலக்கியங்களிலும் அவ்வுண்மை காட்டியிருக்கிறதா? இல்லை என்பதே எனது கொள்கை. "வடவேங்கடம் தென்குமரியாயிடைத் தமிழ் கூறுநல்லுலகம்" என்றற்ருெடக்கமாய்ப் பழையநூல்களிற் காணப்படும் எல்லைக்குறிப்புக்களெல்லாம் தென்னிந்தியாவையே தமிழ்நாடாக்குகின்றன. வடபாகங்களை ஒரு பழந்தமிழ்நூலேனும் தமிழ்நாடாகக்கூருமைகொண்டு, இந்நூல்கள் யாவும் ஆரியர் தமிழரைத் தென்னுட்டிற்சேர ஒதுக்கியபின் பலநூற்ருண்டுகள் கழிந்துதான் உண்டானவை எனக் கொள்ளக்கிடத்தலும் ஒன்று.

ஆயின் "செந்தமி"ழின் சென்ற சஞ்சிகையில் வெளிப்பட்ட "இந்துக்கள்வரலாறு" எனும் அரிய பொருளுரையை வரைந்த அறிஞர்,

"'தென்குமரி வடபெருங்கல்
குணகுட கடலா வெல்லை'

என்னும் மதுரைக்காஞ்சியடிகளாலும்,

'வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனுஅ துருகெழு குமரியின் தெற்கும்
குணுஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்'

என்னும் புறப்பாட்டடிகளாலும் தமிழ்நாடு இமயந்தொட்டுக் குமரியாறுவரையும் பரந்துகிடந்த தேயமென்பது புலப்படுகிறது"

என எழுதியிருக்கக்கண்டு, எனதுகொள்கை பிழையாயிற்றுப் போலும்; அப்படியாயின் நன்றுதானே,—என்று எண்ணமிட்டுக் கொண்டே சுட்டிய அடிகளைத் தத்தம் சொல்நிலை பொருள்நிலை களிற் பார்த்தேன். பார்த்த அளவில் "உள மேற்கோள்களை ஒத்துப்பாராமல் விடாதே" என ஆங்கிலப்புலவரொருவர் சொல்லிய எச்சரிப்பின் நற்பயனைக் கண்டுகொண்டேன். மதுரைக்காஞ்சியில் "குணகுட கடலா வெல்லை" என்ற அடியின்கீழ்த் தொடர்ந்து வருவன,

'தொன்று மொழிந்து தொழில் கேட்ப
வெற்றமொடு வெறுத் தொழுகிய
கொற்றவர்தங் கோனுகுவை' (72–74)

எனும் அடிகளாம். உரையாசிரியரின்கருத்துப்படி முழு மேற் கோளும், "தென்றிசைக்குக் குமரி எல்லையாக, வடதிசைக்குப் பெரிய மேரு எல்லையாக, கீழ்த்திசைக்கும் மேற்றிசைக்கும் கடல் எல்லையாக இடையில் வாழ்வோரெல்லாம் தம்முடன் பழமையைச் சொல்லி ஏவல்கேட்கும்படி வெற்றியோடே செறிந்து நடந்த வெற்றி யுடையோர்தம்முடைய தலைவனுன தன்மையையுடையை" எனப் பொருள்படும். ஆகவே, மாங்குடிமருதனுர் பாதகண்டம் முழுதி லும் அரசாண்ட வெவ்வேறு அரசர்கட்கெல்லாம் நெடுஞ்செழியன் தலைவனுவான் எனப் புகழ்ந்துபாடினுரேயன்றி, அப் பாதகண்டம் முழுமையும் தமிழ்நாடென்று சொன்னுரல்லர். பாண்டியன்முத லான தென்னுட்டரசர்கள்பலர் வடநாட்டிலும் தம் ஆணையைச் செலுத்தி இமயமலையில் தமது இலாஞ்சனையைப் பொறித்துவைத் தார் எனப் பாடுவது பின்னுளின் கற்சாசனங்களிலும் காணப் படுகின்ற ஒரு உயர்வுநவிற்சியாம்,—என்பது யாவரும் அறிந்த தொன்று.

புறப்பாட்டு மேற்கோளின் எஞ்சிய அடிகளையும் நோக்குவோம். 6-ஆம் பாட்டின் நாலாவது அடிவரையும் செந்தமிழ் விஷயதாதா எடுத்தோதினுர். ஐந்தாவது முதலியன பின்வருவன:

'கீழது, முப்புண ரடுக்கிய முறைமுதற் கட்டின்
நீர்நிலை நிவப்பின் கீழு மேல
தானிலை யுலகத் தானு மானு
தருவும் புகழு மாகி விரிசீர்த்
தெரிகோன் ஞமன்ன் போல வொருதிறம்
பற்ற விலியரோ நிற்றிறஞ் சிறக்க'

இவற்றிற்கு உரை: "கீழதாகிய நிலமும் ஆகாயமும் சுவர்க்கமு மென மூன்றுங்கூடிய புணர்ச்சியாக அடுக்கப்பட்ட அடைவின்கண் முதற்கட்டாகிய நீர்நிலைக்கண் ஓங்கிய நிலத்தின்கீழும், மேலதாகிய கோலோகத்தின்கண்ணும் அமையாது உட்கும் புகழுமாக; பரந்த அளவையுடைய பொருள்களை ஆராயும் துலாக்கோலின்கட் சமன் வாய்போல ஒருபக்கம் கொடாதொழிக" என்பது. ஆகவே இதுவும் ஒரு பாண்டியனைப் பாடிய புகழேயாம். இது தமிழ்நாட்டெல்லை கூறுவதன்று.

தமிழ்நூல்களுள் யாதாவது தமிழ்நாடு இந்தியாமுழுதும் பரந்திருந்ததை ஓதுவதுண்டாயின் அதனைச் "செந்தமிழ்"வாயி லாய் எடுத்துக்காட்டும் அறிஞர்பேரில் மிக நன்றிபாராட்டுவேன்.

ஸ்ரீ:

அநுதாபக்குறிப்பு

திருக்கோவலூராதீனகர்த்தரும் ஞானியார் என்ற சிறப்புப் பெயரால் வழங்கப்பெற்றவருமான சீலஸ்ரீ. சிவசண்முகமெய்ஞ் ஞான சிவாசாரியசுவாமிகள் நிகழும் விஷு ஹூ தை மீ ௧௧ (1—2—42)உ இறைவனடிநிழலெய்தியதறிந்து வருந்துகிறோம். இவர் சிறந்த கல்வியும் நிறைந்த கேள்வியும் தெளிந்த செந்தமிழ்ப் புலமையும் உடையவர்; வடமொழி ஆங்கில மொழியினும் வல்லுநர். உலகநடையும் வைதிகநடையும் ஒருங்குணர்ந்து தம்நிலைக் குத்தக ஒழுகிவந்தவர்; அவனியிலாங்காங் கடைந்தருளுரையாற் சிவநெறி சிறக்கவும் செந்தமிழ் தழைக்கவும் தவமுயன்றுயர்ந்த சால்புடைப் புனிதர்; திருந்திய பெருங்குணச் செல்வருட்செல்வர்; மாணவர்குழுவேயன்றிப் பலதிறப்பட்ட மக்கள்நிறைந்த பேரவையும் வியந்து மகிழும்படி இலக்கிய இலக்கண நூனயங்களையும் சமய நூற்கருத்துக்களையும் பலவகையழகும் நிலவுமாறு எடுத்துரைக்கும் சொல்வன்மையும் வாய்ந்தவர். இவரால் தமிழுணர்வும் சமயவுணர்வும்பெற்றுத் திருந்திய மக்கள் பலர். இவர்பிரிவால், ஆதீனங்கள் தமக்குப் பெருமைபளித்துவந்த ஒரு சிறந்த கர்த்தரை இழந்தன. தமிழ்நாடு ஒப்பற்ற சொல்வன்மையுடையாரை இழந்தது. மாணாக்கர் ஒருபர்ந்த போதகாசிரியரை இழந்தனர். சமயக்கணக்கர் தம்முள் சமரசபாவமுடைய ஒரு தக்காரை இழந்தனர். இவ்வாறு பலதுறையிலும் மேன்மக்களால் நன்குமதிக்கப்பெற்ற இவரைப் பிரிந்து துயருறும் அன்பர்க்கெல்லாம் நமது அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பத்திராசிரியர்.

பட்டினப்பாலைத்தலைவன் யார்?

"சோழன் கரிகாற்பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடிய பட்டினப்பாலை" என்று இன்றளவும் புலவர்பலர் கூறுவதைக் கேட்கின்றோம்; கிட்டிய நூற்சான்றனைத்தும், "பட்டினப்பாலைத்தலைவன் யாராயினுமாகலாம், ஒருபோதும் கரிகாலனாக மாட்டான்"—என வெள்ளிடைப்பெருமலைபோல் விளக்கக் காண்பாம். எனினும், 'கரிகாலனே பட்டினப்பாலைகொண்டு மகிழ்ந்து, அதைப்பாடிய புலவனுக்குப் பதினறு நூறாயிரம்பொன் பரிசளித்தான்' — எனும் கொள்கை புலவரிடை வேரூன்றி வளர்ந்தடர்ந்து படர்ந்துவரப் பார்க்கின்றோம். அதை மறுப்போர் புலவர்பலர் நகைப்பினுக் காளாவதிலும் ஐயமில்லை.

தற்கால அகத்தியர் எனத் தமிழ்ப்புலவர் பாராட்டும் தக்கார் மகாமகோபாத்தியாய சாமிநாதையரவர்கள் பதிப்பித்த புறநானூற்றில் பாடப்பட்டோர்வரலாற்றில் சோழன்கரிகாற்பெருவளத்தானைப்பற்றிய குறிப்பைப் பார்ப்போம்.

"முடத்தாமக்கண்ணியார்பாடிய பொருநராற்றுப்படைக்கும், கடியலூர் உருத்திரங்கண்ணனார்பாடிய பட்டினப்பாலைக்கும் தலைவன் இவனே. பட்டினப்பாலைகேட்டுக் கடியலூர் உருத்திரங் கண்ணனாருக்குப் பதினறு நூறாயிரம்பொன் பரிசளித்தானென்று கலிங்கத்துப்பரணி இராசபாரம்பரியம் 22-ஆம் செய்யுளால் விளங்குகின்றது" என்று எழுதியுள்ளார்கள்.

இனி அவர்கள் வெளிப்படுத்திய பத்துப்பாட்டு முகவுரையில் "பட்டினப்பாலை.........தலைவியைப் பிரிந்துவாரேனெனச் செலவழுங்கிக் கூறுங் கூற்றாகச் சோழன் கரிகாற்பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது"—என்றும் எழுதியுள்ளார்கள்.

இது, இப்பெரும்புலவர் தம் கருத்தாகத் தரும் குறிப்பு. இத்துணிவு தாம் கொண்டதற்குக் கலிங்கத்துப்பரணித்தாழிசை

யொன்றை மேற்கோளாகத் தருகின்றார்கள். அத்தாழிசை வருமாறு:—

"தத்து நீர்வாராற் குருமி வென்றதும்
தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
பத்தோ டாறுநூ றுயிரம் பெறப்
பண்டு பட்டினப் பாலை கொண்டதும்"

இது சோழர்குடியிற் கலிங்கப்போர்வெற்றிபற்றிய பரணியில் அவ்வெற்றிகொண்ட விஜயதரன் என்ற இரண்டாவது இராசேந்திரனின் முன்னோர்பெருமைபாராட்டிக் குலமுறைகிளத்தும் 'இராசபாரம்பரியப்' பகுதியில் வருகிறது. இதில் பண்டு பட்டினப்பாலை கொண்டு பதினறு நூறுயிரம்பொன் பரிசுதந்ததைக் கூறியது தவிர, அவ்வாறுசெய்தவன் கரிகாலன் என்னும் குறிப்புச் சிறிதும் இல்லை. "இராசபாரம்பரியத்" தாழிசைகள் அபயன் என்ற விஜயதரனின் முன்னோரான சோழமன்னர் பலராற்றிய அருஞ்செயல்களை நினைந்து புனைந்துகூறுகின்றன என்பது வெளிப்படை.

"கமல யோனிமுத லாகவரு சோழர்மரபிற்
காவன் மன்னவர்க ளாகிவரு கின்றமுறையில்",

"அரவணைத் துயிலு மாதிமுதலாக வபயன்
தரணிகாவ லளவும்"

சொல்லும் இவ்வரலாற்றின்தொடக்கத்தில் கரிகாலன் கூறப்படுகிறான். அவனுக்கு நாரதர் இவ்வரலாறு கூறுகிறார். இதில், சேரனைச் சிறைவிடுத்துக் களவழிப்பாக்கொண்ட செங்கட்சோழன் செய்திக்குப்பிறகே பட்டினப்பாலைகொண்டபரிசு கூறப்படுகிறது.

முடிச்சோழர்குடிவேந்தர் மூவர் முறையே அடிபரவ, அவரவையை அணிசெய்த கூத்தர் யாத்த உலா மூன்றும் கரிகாலன் பெருவாழ்வும் அவன்பின்னே செங்கணான் ஆட்சியும் பிறழாத வரிசையிலே பேசக்காண்போம். பரணியிலும் பட்டினப்பாலைப் பரிசு செங்கணான்செய்திக்குப்பின்னரே வருகின்றது.

சோழருக்கு நிறைபுலமையமைச்சரினும் நெருங்கிநின்ற கூத்தரும் சேக்கிழாரும் கரிகாலன் பட்டினப்பாலைகொண்ட கதை கூறு

கிலர். இளங்கோவும் கரிகாலன் 'பாலைக்குப்' பரிசளித்த குறிப்பெதுவும் கூறுகிலர்.

இவையனைத்தும் 'பாலைக்குப்' பரிசுதந்து புகழ்கொண்டவன் யாரென்று கூறவில்லை. ஆகவே, பட்டினப்பாலைகொண்டு பரிசளித்தபெருமை விஜயதரன்முன்னோருள் ஒரு சோழனது என்பதுமட்டுமே பரணித்தாழிசை கூறுவதன்றி அச்சோழன் கரிகாலன் என்பதனை எனைத்தளவும் சுட்டவில்லை. ஆதலினால் பட்டினப்பாலைத்தலைவன் கரிகாலனென்பது பிறசான்றால் தெளியப் பெற்றால் இப்பரணித்தாழிசையும் அன்னவனைச் சுட்டுவதாய் எண்ண இடம் தருதல்கூடும். அன்றி, அது தன்னளவில் பொன் தந்தோன் யாரென்று சான்றுதவத்தக்கதன்று. பாலைக்குப் பரிசளித்தசோழன் யாரென்பதனைப் பிற நல்ல சான்றுகளால் ஆராயவேண்டுவது மெய்விரும்பும் புலவர்கடன்.

இந்நிலையில், பட்டினப்பாலையும் சிலப்பதிகாரமும் மூவருலாவும் கூறாதகொள்கையொன்றைத் தமிழ்ப்புலவர் மேற்கொள்ள நேர்ந்தது நச்சினார்க்கினியரை உச்சிமேற்கொண்டதன் பயனாகும். பரந்த நூற்பயிற்சிநிறைந்த உரைகாரருட் சிறந்த அடியார்க்கு நல்லாரைக் கல்வியால் ஒப்பாராயினும், அடியார்க்குநல்லார்போல் அடக்கமின்றி, எப்போதும் யாவரும் கூறாப் புதியனபுனையும் பெருமிதமிகுந்த நச்சினார்க்கினியர் பட்டினப்பாலையீற்றில் "திருமாவளவன்" என்பதற்குத் "திருவின்பெருமையையுடைய கரிகாற்பெருவளத்தான்" என்று எழுதியவுரையே புலவரைமருட்டும் இக்கொள்கையின் விதையும் விளைவும் கொழுகொம்புமாகும். பட்டினப்பாலைசுட்டும் திருமாவளவன் கரிகாலன் என்பதற்கு இவர் கூறுவதொழிய வேறு சான்றெதுவும் யாண்டும் காணுதற்கில்லை. இவர், தம்கூற்றே எதையும் நிறுவப் போதிய ஆதாரவாமென ஓதுவதல்லாமல், பிறசான்றும் வேண்டும் என எண்ணவொண்ணா இயல்புடையார். ஆக்கியோர்பெயர் முதலிய குறிப்பின்றித் தம் உரைகளிற் பற்பலசெய்யுட்களை இவர் எடுத்தாளுவது தம்கூற்றுக்கு ஆதரவுகாட்டுதற்கன்று, தம் கல்விப்பரப்பை நாட்டுதற்கேயாமென்பது, அடியார்க்குநல்லார் பரிமேலழகர்போல்வாருரையோடு இவருரைகளை நடுநிலையில் ஒத்துநோக்கின் எளிதில் வெளியாகும்.

இனிப் பட்டினப்பாலைத்தலைவன் கரிகாலன் என்னும் இவர் கூற்று அடியற்ற நெடுமரமாவதை இங்குச் சிறிது ஆராய்வோம்.

முதலில், பட்டினப்பாலை பாடிய உருத்திரங்கண்ணனாரே பெரும்பாணாற்றுப்படையும் ஆக்கியவர். இப்பாணாறு தொண்டைமான் இளந்திரையனைப்பாடியது. இளந்திரையன் கரிகாலனுக்குப் பின் ஆண்ட கிள்ளிவளவன்மகனென்று மூவருலாக்கள் கூறுகின்றன. இன்னும் இப்புலவரியற்றிய அகம்-167, குறுந்தொகை 352-ஆம் பாட்டுக்களும் இவரைக் கரிகாலனுக்குப் பிற்காலத்தவராகக்காட்டும். பொருநராற்றுப்படை பாடிய முடத்தாமக்கண்ணியாரும் மற்றும் கரிகாலனைப்புகழும் வெண்ணிக்குயத்தியாரும் கருங்குழலாதனாரும் கரிகாலனுக்குக் காலத்தாற் பிந்தியோர் யாரையும் பாடாமையும் ஈண்டுக் கருதற்குரியது.

இரண்டாவதாகப் பட்டினப்பாலைகூறும் பாட்டுடைத் தலைவன்வரலாறு கரிகாலனைப்பற்றிய பொருநராற்றுப்படை வரலாற்றோடு எவ்வகையிலும் எனைத்தளவும் ஒவ்வாமல் முற்றிலும் முரணி வேறுபடுவதும், இவ்விருபாட்டும் தத்தம் தலைவனுக்கு வெவ்வேறு வரலாறுகூறுவதும் ஒருமுறைபடிப்பினும் உடனே விளங்கும் உண்மைகளாம். பேர் பிறப்பு இளமை அரசுரிமை ஆட்சி வாழ்க்கை போர்வென்றி பெற்றோர் சுற்றம் உற்றார் செற்றார் முதலிய ஒவ்வொன்றிலும் கரிகாலனும் பட்டினப்பாலைத்தலைவனும் (இவ்விருபாட்டுடைத்தலைவரும்) தம்முட் சிறிதும் ஒவ்வாத இருவேறு சோழர் என்பதை ஆற்றுப்படையும் பட்டினப்பாலையும் அடிதோறுந் தெரிவிக்கும் முரண்பாட்டால் இனிது காண்பாம்.

இம்முறையில் நோக்குங்கால் தொடக்கத்தில் தோன்றுவது இது:—கரிகாலன்பேரும் பிறப்பும் போரும் பெருமையும் பொருநராற்றுப்படை பல்கானும் பலவிடத்தும் பலபடப் புகழ்ந்துபாராட்டுகிறது. பட்டினப்பாலையின் முன்னூற்றோரடிமுழுதும் துருவினும் கரிகாற்சோழன்பெயரேனும் பிறப்பு போர்வென்றி முதலிய வரலாற்றுச்செய்தியேனும் காணேனாது.

முடத்தாமக்கண்ணியார்,

"கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்
தாணிழன் மருங்கி லணுகுபு குறுகித்
தொழுதுமுன் னிற்குவி ராயின்.........
....
....
நன்பல் லூர நாட்டொடு நன்பல்
.................................வேழம்
தரவிடைத் தங்கலோ விலனே" (பொருநராற்றுப்படை)

எனப் பொருநனை ஆற்றுப்படுத்தும்வாயிலாகக் கரிகாலன்பெயரும் அவன் கொடைப்பெருமையும் விளக்குகிறார். அடுத்தபடி கரிகாலன்,

"உருவப் பஃறே ரிளையோன் சிறுவன்"

என்று அவன் தந்தைபெயரும் கூறுகிறார். அவ்விளையோன்மனைவி அழும்பில்வேள்மகளென்பர் நச்சினார்க்கினியர்.

உருத்திரங்கண்ணனார் தம் பாட்டுடைத்தலைவன் தந்தையையே எந்தவகையிலும் சிந்தித்தாரிலர்.

இனிக் கரிகாலன் பெரும்புகழ்ச்செய்திகள், வெண்ணிப்போரில் அவன் "பதினொருவேளிரோடு வேந்தர்சாய மொய்வலியறுத்த" வெற்றியும், வாகைப்பறந்தலையில் ஒன்பதுமன்னரை ஒருங்கு வென்ற பெருமையுமேயாகும். அவனைப் பாராட்டும் பாடாண் பாட்டுக்களில் இவ் விரு போர்வெற்றிபுகழாததொன்றைக் காணல் அரிது. ஐயைங் தைந்நான் கையிரண்டடிகளில் முடியும் அகவல்கள் மறவா வெற்றியை, ஐந்நூறுபதின்மேல் அடிநிமிர் வஞ்சிநெடும்பாட்டதனில் கரிகாலன்புகழ்கருதினராயின் உருத்திரங் கண்ணனார் மறத்தல்கூடுமோ? "அரம்போழவ்வளை" எனும் அகப்பாட்டில்,

"வெருவரு தானையொடு வேண்டுபுலத் திறுத்த
பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார்
சூடா வாகைப் பறந்தலை பாடுபெற
ஒன்பது குடையும் ஒருபக லழித்த
பீடின் மன்னர் போல,

செய்வினை மருங்கிற் சென்றோர் வல்வரின்
ஓடுவை மன்னால் வாடைநீ யெமக்கே." (அகம்-125.)

எனத் தோழிகூற்றாய்ப் பரணர் கூறுவர்.

....

'காய்ந்துசெலற் கனலி' என்னும் அகப்பாட்டில், ...

"கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்
....
பொருதுபுண் ணாணிய சேர லாதன்
அழிகள மருங்கில் வாள்வடக் கிருந்தென" (அகம்-55.)

எனப் பாடுவர் மாமூலனார்.

ஒன்பதுவரியில் வெண்ணிக்குயத்தியார்பாடிய புறப்பாட்டில்,

"......................கரிகால் வளவ !
சென்றமர் கடந்தநின் னாற்றல் தோன்ற
வென்றோய் ! நின்னினும் நல்ல னன்றே
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புக ழுலக மெய்திப்
புறப்புண் ணாணி வடக்கிருந் தோனே" (புறம்-66.)

என இகழ்வதுபோல நயம்படப்புகழ்வர்.

இவ்வருந்திறலை முடத்தாமக்கண்ணியாரும் தம் ஆற்றுப்படையிற் போற்றுகிறார்.

"ஆளி நன்மா னணங்குடைக் குருளை
மீளி மொய்ம்பின் மிகுவலி செருக்கி
முலைக்கோள் விடாஅ மாத்திரை ஞெரேரெனத்
தலைக்கோள் வேட்டங் களிறட் டாஅங்
கிரும்பனம் போந்தைத் தோடுங் கருஞ்சினை
யரவாய் வேம்பி னங்குழைத் தெரியலும்
ஓங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த
இருபெரு வேந்தரும் ஒருகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாட்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்"

(பொருந. வரி. 139—148)

இவ்வாறு 'உலகமெய்திய விருபுகழ்'வெற்றியைப் பாலைப் பாட்டு அதன் தலைவன்போர்த்திறம் பலபடப்பகரும்பகுதியிற் சிறிதும் குறியாமை கருதற்குரியது. கரிகாலன்புகழ்கருதிப் பாடில் வாகையொடு வெண்ணிக்களத் தமர்கடந்த அவன் வாகைப் பாடாண்திறத்தை உருத்திரங்கண்ணனார் மறத்தல்கூடுமோ?

அன்றியும், நெடுஞ்சேரலாதனும் அடுந்திறல்மாறனும் கரிகாலன் பொருதுவென்றபகைவராவர். இம்முடியுடையா ரிருபெரு வேந்தர்பெருமிதமடக்கிய தறுகண்மை கரிகாலனது. இன்னோர் தோல்வியை இகழ்ந்து மறந்து சிறுநாட்டுக் குறுமன்னன் 'இருங் கோவேள் மருங்குசாய' எதிர்த்துவென்றதொன்றைமட்டும் பட்டினப்பாலை பாராட்டுகிறது. இருங்கோவேள் தலையாலங் கானத்து நெடுஞ்செழியன் 'வெஞ்சமர் முறுக்கி நல்வல மடக்கிய' எழுவருள் ஒருவன். (அகம்-36. புறம்-19-36 பாட்டுக்களைப் பார்க்க). கபிலரால் பாடப்பெற்றவன். கபிலரும் நெடுஞ்செழிய னும் கரிகாலனுக்குக் காலத்தாற் பிந்தியவர். கரிகாலனொடு பொருது புறப்புண்கொண்டவன் நெடுஞ்சேரலாதன். நெடுஞ் செழியனுக்குத் தோற்றுச் சிறையிடப்பட்டவன் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல். இச்சேரர் இருவரும் முன்பின் வேறுபட்டகாலத்த வர். இதனால், பொருநாறு பாலைப்பாட்டுத் தலைவர் இருவேறு சோழராவர்; அவர்களைப் பெற்றோரும் செற்றோரும் வெவ்வே றரச ராவர்; போர்க்களமும் வெவ்வேறும் என்பதெல்லாம் விளக்கமாகும்.

இனி இவ்விருபாட்டும் வெவ்வேறுவகையில் தம்முள் முரண் படக்கூறும் வரலாறுகளையும் சிறிது ஆராய்வோம். கரிகாலன் பிறப்பும் இளமையும் மறப்பரும்பெருமையும் சிறப்பினில் ஒப்புத் தேடுதற்கரிய செருவடுந்திறலும் தாமக்கண்ணியார் ஆற்றுப்படை யில் தரும் பரிசு இதுவாம்:—

"உருவப் பஃறே ரிளையோன் சிறுவன்
முருகற் சீற்றத் துருகெழு குரிசில்
தாய்வயிற் றிருந்து தாய மெய்தி,

எய்யாத் தெவ்வர் ஏவல் கேட்பச்
செய்யார் தேஎந் தெருமரல் கலிப்பப்
பவ்வ மீமிசைப் பகற்கதிர் பரப்பி
வெவ்வெஞ் செல்வன் விசும்புபடர்ந் தாங்குப்
பிறந்துதவழ் கற்றதற் றொட்டுச் சிறந்தநன்
னாடுசெகிற் கொண்டு நாடொறும் வளர்ப்ப,
ஆளி நன்மா னணங்குடைக் குருளை
மீளி மொய்ம்பின் மிகுவலி செருக்கி
முலைக்கோள் விடாஅ மாத்திரை ஞெரேரெனத்
தலைக்கோள் வேட்டங் களிறட் டாஅங்
கிரும்பனம் போந்தைத் தோடும் கருஞ்சினை
அரவாய் வேம்பி னங்குழைத் தெரியலும்
ஓங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த
இருபெரு வேந்தரு மொருகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாட்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்."

(பொருந. வரி. 130—148.)

கரிகாலன் உருவப்பஃறே ரிளையோன் சிறுவன். உருவப் பஃறே ரிளையோன் "பயங்கெழு மாமழை.......வயமான்சென்னி" (புறம்—266), "செஞ்ஞாயிற்றுக்கவினன்" (புறம்—4). பெருவள முடைய புனல்நாட்டை அருந்திறலோ டாண்டுமாண்ட இச்சோழன் இறக்க, அவ னரசுரிமைத்திரு அப்போது அவன் கோமனைவி வயிற்றிலிருந்து பின் பிறந்த கரிகாலனைக் கருவிலடைந்தது. இத னால் இவன் 'தாய்வயிற்றிருந்தே (சோணாடாளும்) தாயமெய்தி'னன் எனத் தாமக்கண்ணியார் வாய்மைகூறினார். இவன் சீரும் சிறப்பும் திருவுடைச்சோழவள்நாட்டாட்சியும் பிறந்ததுமுதலே பிறங்கித் திகழ்ந்தனன். அதனால், "பிறந்து தவழ்கற்றதற்றொட்டுச் சிறந்த நன்னாடு செகிற்கொண்டு நாடொறும் வளர்ப்ப" என்று ஆற்றுப் படை புகழ்கின்றது.

இதற்கு முழுதும் மாறாகப் பட்டினப்பாலை அதன் தலைவன் வரலாறு கூறுகிறது. அது வருமாறு:—

"...............................கூருகிர்க்
கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்குப்
பிறர்—பிணியகத் திருந்து பீடுகாழ் முற்றி,
அருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று
பெருங்கை யானை பிடிபுக் காங்கு
நுண்ணிதி னுணர நாடி நண்ணார்
செறிவுடைத் திண்காப் பேறி வாள்கழித்
துருகெழு தாய மூழி னெய்திப்
பெற்றவை மகிழ்தல் செய்யான்; செற்றோர்
கடியரண் தொலைத்த கதவுகொன் மருப்பின்
முடியுடைக் கருந்தலை புரட்டு முன்றாள்
உகிருடை யடிய ஓங்கெழில் யானை
வடிமணிப் புரவியொடு வயவர் வீழப்
பெருநல் வானத்துப் பருந்துலாய் நடப்பத்
தூறிவர் துறுகல் போலப் போர்வேட்டு,
....
....
வளைவாய்க் கூகை நன்பகற் குழறவும்
அருங்கடி வரைப்பின் ஊர்கவி னழியப்
பெரும்பாழ் செய்தும் அமையான்"

(பட்டினப்பாலை, வரி–220–234, 268–270)

கரிகாலன், கருவிலே திருவெய்திப் பிறந்து தவழக்கற்றது முதலே சிறந்த சோணாட்டரசை அவன் சிறுதோள்தாங்கச் செங்கோல்செலுத்திப் பகைவரும் அவனேவல்கேட்ப அவனேவல்செய்யாத பகைவர்நாடு தெருமந்து கவன்று கலங்க, நாடொறும் அருளும் ஆண்மையு மிலங்க ஆண்டமை ஆற்றுப்படை அறிவிக்கின்றது. இனி, அதற்கு நேர்மாறாகப் பட்டினப்பாலை அப்பாட்டுடைத் தலைவன்வரலாறு தருகின்றது. கூருகிர்க் கொடுவரி (வேங்கை)க்குருளை கூட்டுள்வளர்ந்ததுபோல அவன் சிறுபருவ முழுதும் பகைவர் சிறையகத்திருந்தான்; பிறகு தறுகண்மை

முதிர்ந்து குழியில்வீழ்த்திய களிறு சினந்து கரையைக் கொம்பாற் குத்திக் குறைத்துக் குழியைநிரப்பி வெளியேறித் தன் பிடியொடு கூடுவதுபோல், ஆழச்சூழ்ந்து பகைவரின் வலியகாவலை அடியறுத்து வெளிவந்து படையமைத்துப் பகைவரைப் பொருதடர்த்து, அவர் வௌவிய தனது உரிமையைத் தன்திறலால் வென்றுகொண்டான். அவ்வாறு மீட்டிக்கொண்ட தன் நாட்டினதாட்சி போதுமென்று அமையாமல் வெகுண்டு, முன் தன்னைத் தளைத்தவர்தம் படப்பைநன்னாட்டிற் படையெடுத்தேறி, அரண்களை யெறிந்து, ஊர்களையழித்து, நாடுதொலைத்துப் பெரும்பாழ் செய்தும் அமைகிலன்.

பிறந்து தவழக்கற்றதுமுதற் பகையின்றி நாடாண்டவன் கரிகாலன்: இளம்பருவமுழுதும் பகைவர் சிறையிலிருந்து வருந்தியவன் பட்டினப்பாலைத்தலைவன். கரிகாலன் தன்னை வந்தெதிர்த்த இருபெருவேந்தரும் வேளிர்கூட்டமும் இரியப் பொருது தன் நாட்டில் ஆக்கமும் அமைதியும் நீக்கற நிறுத்தி, அறவோர்வியக்க வழக்குத்தீர்த்துச் செங்கோல்சிறக்க ஆண்டவன்; தெற்கே இருநில மருங்கிற் பொருவாரின்றி வடவரைமட்டும் வடவரைவென்று, பனிமலைத்தலையிற் பாய்புலிபொறித்த சீர்த்தியன். 'தெவ்வர்நோக்கிய திருமாவளவனோ' இளம்பருவத்தைச் சிறையிற்கழித்துத் தறுகண்முதிர்ந்து தன்தளைமுறித்துத் தாயப்பட்டினத்தாட்சியை மீட்டினன்; தற்சிறையிட்டோர் தம்மைக்கொன்றும் குறையாச் சினத்தாற் கொதிக்குமுளத்தொடு பிறர் வளநாடுகள் ஊரொடு மழியப் போர்தொடுத்தேறிப் பாழ்படுத்தமையாப் பான்மையன். ஓவாக்கொடையை மேவி யிசைகொண்ட கரிகாலன் வள்ளல். தீராச்சினத்தால் போரேதொழிலாய், 'முனைகெடச்சென்று முன் சமம்முருக்கி.......செங்கணாற் செயிர்த்தோன்' திருமாவளவன். இவ்விருவரும் ஒருவரென்பது, மலையும் மடுவும் நிலையினிலொன்றென நிறுவுதல்போலாம்.

இவ்வாறு நல்ல நூற்சான்று சொல்லவுங்கொள்ளாது, இன்று வரை பழையவுரையொன்றையேநம்புவாரைமெய்யறியத்தூண்டுவதும் குற்றமாகும். எனினும், உண்மைகண்டுவக்கு முளத்தவர்க்குதவுமாறிதனை எடுத்துக்காட்ட எண்ணி எழுதலானேன்.

மேற்கூறியாங்கு, பட்டினப்பாலைகொண்டவன் கரிகாலனல்லனெனத் தெளிந்தோம். அவன் திருமாவளவனென்று பாலைப்பாட்டே கூறுவதனாலும், அவன் பட்டினத்தாட்சிக்குரியவனென்பதாலும், அவன் ஒரு சோழனவன். அவனுக்குமுன் கரிகாலன் காவிரிப்பூம்பட்டினமாண்டவன் என்பது பல பழஞ்செய்யுள்களால் நாமறிவோம். அவன் இளமையில் நெருப்புண்டு தப்பியதில் கால்கரிந்ததனால் அவன் கரிகாலனானதும் செய்யுட்சான்றால் தெளிந்தசெய்தியாம்.

"முச்சக் கரமு மளப்பதற்கு நீட்டியகால்
இச்சக் கரமே யளந்ததால்—செய்ச்செய்
அரிகான்மேற் றேன்றொடுக்கு மாய்புனனீர் நாடன்
கரிகாலன் கானெருப் புற்று" (பழையவெண்பா)

'களியியல் யானைக் கரிகால் வளவ' (புறம்–66)

'கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்' (பொருந. வரி. 148)

'விண்பொரு பெரும்புகழ்க் கரிகால் வளவன்'
(சிலம்பு. கடலாடு. வரி. 159)

இவ்வாறு பழைய செய்யுட்கள் அவன் கால்கரிந்த செய்திகூறநாம் காணுகின்றோம். இனி இச்செய்தி இன்னும் ஒரு பழம்பாட்டிலும் கூறப்படுகிறது.

"சுடப்பட் டுயிருய்ந்த சோழன் மகனும்
பிடர்த்தலைப் பேரானைப் பெற்றுக்—கடைக்கால்
செயிரறு செங்கோல் செலீஇயினான்; இல்லை
உயிருடையா ரெய்தா வினை" (பழமொழி–105)

நெருப்பிலகப்பட்டுக் கரிந்தகாலுடன் தப்பிய சோழன்மகன் பிடர்த்தலையென்னும் பெயருடையானின் உதவிபெற்று, இறுதியிலே வேந்தனாய் ஆண்டான்; அதுபோல் பிழைத்திருந்தால் கருதியது எதுவும் கைகூடாதுபோகாது—என்பது இவ்வெண்பாவின் பொருள். சாவாதிருந்தால் எதையும் சாதிக்கலாம் என்பது பழமொழி.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை -600090.

இப்பாட்டில் அதற்கெடுத்துக்காட்டியது ஒருசோழன் கதை. இதில் 'சுட்டப்பட்டுயிருப்ந்தசோழன்' நெருப்புற்றுக் கால்கரிந்த கரிகாற் பெருவளத்தானுதல் வெளிப்படை. எனில், கரிகாலன் இளமையி லேயே நாடாண்டு பகைவரை வென்றதல்லால், பகைவரால் தளைப் பட்டுத் தப்பின்செய்தி கேட்கப்படாதது; முடத்தாமக்கண்ணி யார் பொருநராற்றுப்படையில் விளக்கிய கரிகாலன்வரலாற்றேடு முழுதும் ஒவ்வாது முரணுவது.

பழமொழிவெண்பா நெடுங்காலம் அரசிழந்து சிறையிருந்து பின் கடைக்காலத்திற் பிடர்த்தலையாருதவியால் இழந்தநாடு மீளப் பெற்ற ஒரு சோழனைச் சுட்டுகிறது. பொருநராற்றுப்படை இதற்கு மாறுகக் கரிகாலன் பிறக்குமுன்னே 'தாய்வயிற்றிருந்து தாயமெய்தி'ப் பிறந்து தவழக்கற்றநாள்தொட்டே சோழவளநாட் டின் ஆட்சியைத் தன் தோளில் தாங்கி, இளம்பருவத்திலேயே எதிர்த்துவந்த முடிவேந்தரிருவரையும், ஒன்பது குறுமன்னரை யும் வெண்ணியிலும் மீட்டும் வாகையிலும் வென்றடக்கித் தனைப் பொருவாரின்றிப் புகழொடு வாழ்ந்தவன் என்று பொருநராற்றுப் படையும் பல பிற பழைய பாட்டும் கூறுகின்றன. அன்றியும், அவன் மாமன் அழுந்தூர்வேள், மைத்துனன் நாங்கூர்வேள் எனக் கேட்பதல்லால், பிடர்த்தலையான் கரிகாலனுக்கு உறவினனுகவோ உற்ற துணைவனுகவோ யாண்டும் சுட்டப்படவில்லை.

இளமையிற் சிறையிருந்து பின் பிடர்த்தலையாருதவியால் பகைவரைவென்று நாடுகொண்டாண்டவனைப் பழமொழிவெண்பாக் கூறும் சோழனே பட்டினப்பாலைத்தலைவனுமாவன் என்பது இவ்விரு பாட்டுக்களின் வரலாற்றின் ஒற்றுமையால் விளங்குகிறது. ஆனுல், இவ்விருவேறு செய்யுள்வரலாறும் ஒருங்குசுட்டும் சோழன், கால் நெருப்புற்றுக் கரிந்த கரிகாலனுக்கு மகன் எனப் பழமொழிவெண்பாக்கூறுகிறது. கரிகாலனைமட்டும் சுட்டச் "சுடப் பட்டுயிருப்ந்தசோழன்" எனிற் போதும். "நரைமுடித்துச் சொல் லான் முறைசெய்தான் சோழன்" எனப் பிறிதோரிடத்திற் பழமொழி அவனைப்பாராட்டுவதும் இதனை வலியுறுத்தும். ஈண்டுச் 'சோழன்மகன்' என்ல் மிகையாவதோடு பொருள்மயக்கமும் தரும்.

சுடப்பட்டுய்ந்தவன் சோழனா? மகனா? எனும் வினா எழும். மகன் எனுஞ்சொல் கரிகாலனைக் குறியாமல் அவன்மைந்தனைச் சுட்டலால் இப்பழமொழிச்சோழன் கரிகாலனுக்கு மகனாதல்வேண்டும். சோழர்தலைவனான கரிகாலனைச் சோழன் என்னாமல் சோழன்மகன் என்பதில் பொருத்தமும் பொருளும் இல்லை. ஆதலின், பிறந்தது முதற் சோணாடாண்டு நெருப்பாற் சுடப்பட்டுயிருய்ந்தசோழன் கரிகாலன்; அவன்மகனே இளமையிற் சிறையிருந்து பின் பிடர்த்தலையாருதவிபெற்றுச் சிறைவீடும் சோணாடும் எய்தியாண்ட பழமொழிச்சோழன் என்பது தெளிவாகின்றது.

அன்றியும், கரிகாலன் முதலில் உறந்தையிலிருந்து பின் புகாரை அமைத்து அங்கிருந்து ஆண்டனன் என்று சான்றோர் பழைய செய்யுட்களாலும் சிலப்பதிகாரத்தாலும் விளங்குகின்றது. அவன் இறந்தபிறகு உறந்தையில் தாயச்சோழ ராட்சிகொண்டு, புகாரையும் ஆளக்கருதி, சிறுவனான அவன்மகனைச் சிறையிட்டிருத்தல் வேண்டும். பட்டினப்பாலைத்தலைவன் சிறைவீடுபெற்றதும் தனக்குரிய புகாரை மீட்டுச் செங்கோல்செலுத்தினான் என்று அப்பாலைப் பாட்டாலும் பழமொழியாலும் அறிகிறோம். அதுமட்டோ! சிறைமீட்டிப் பட்டினமாண்டசோழன் உறந்தைச்சோழனைப் பொருதுவென்று போரில் அழித்த உறையூரைத் திருத்திப் புதுப்பித்துத் தானே ஆண்டானெனப் பட்டினப்பாலையே விளக்குகிறது. அப்பாட்டு அவனைக் கரிகாலனென்னாமல் மாவளத்தானெனமட்டும் சுட்டுகிறது. அது பாலைத்திணை கூறும் அகப்பாட்டாதலின், அவன் புறவாழ்க்கைப் பிறவரலாற்றை விரிக்கவில்லை. புறநானூற்றிற் பல பாட்டுக்கள், கரிகாலனையடுத்துப் பின்னிருந்த புலவராற் பாடப் பெற்றவை புகார்வளவர் உறந்தைச்சோழரோடு ஓயாது பகைத்துப் பொருத கதை கூறக் கேட்கின்றோம். கரிகாலனை அவன்காலத்தில் எதிர்த்தசோழர் யாருமின்றி, அவன் தானே உறந்தை புகார் இரண்டையும் ஆண்டதால், இவ்விரு பேரூர்களில் அவனுக்குப் பிறகு சோழர் வெவ்வேறுகிளையினர் ஆண்டு தம்முட்பகைத்துப் பொருதிருத்தல்வேண்டும். அப்போர்களிற் சில புறநானூற்றுப் பாட்டுக்கள் கூறுவனவாகும். நிற்க.

பழமொழிவெண்பாவால் பட்டினப்பாலைத்தலைவன் கரிகாலனுக்கு மகனாதல் கண்டோம். மகன் என்பது நேரே பெற்ற புதல்வனையும் வழித்தோன்றலையும் குறிக்குமாதலின், பட்டினப்பாலைத் தலைவன் கரிகாலனுக்கு நேர்மகனாகவோ, அன்றி அவன் வழித்தோன்றலாகவோ புகாருக்குரியனாய், உறந்தைத் தாயச்சோழரால் இளமையில் உரிமையிழந்து சிறைப்பட்டுப் பிறகு விடுதலையுற்று நாடும்பெற்ற ஒரு சோழனாதல் ஒருதலை.

இன்னும் கரிகாலனைப்பற்றிய கட்டுக்கதைகள் புலவருலகிற் பல வழங்குகின்றன. அவையாராய்தல் இக்கட்டுரைக்கு வேண்டாததால் பின் வேண்டில் எழுத எண்ணி, ஈண்டு விரியாது விடப்பட்டன.

பட்டினப்பாலைத்தலைவன் கரிகாலனல்லன், திருமாவளவனே; அவன் கரிகாலனுக்கு மகனாவன். இதுவே இவ்வாராய்ச்சியாற் றெளிந்த முடிவாகும்.

கரிகாலனைப்பற்றிய சில கட்டுக்கதைகளோடு இதையும் விளக்கி நான் அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சிக்கட்டுரை வெளியீடாய்வரும் அயனச்சஞ்சிகை—தொகுதி—7 பகுதி—2ல் ஆங்கிலத்தில் எழுதினேன். அதைப்படித்த ஒருசிலர் தமிழிலும் அதன்பொருளைத் தருமாறு கூறியதால் இதனைத் தற்போதெழுத நேர்ந்தது. கரிகாலனைப்பற்றிய மற்றக் கட்டுக்கதைகளின் உண்மையறியப் பலர்விரும்பின் அவற்றை இனி ஆராய்வோம்.

S. S. பாரதி.

மதிப்புரை

கல்வி:—இப்பெயருடன் கோயமுத்தூர்ஜில்லா ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்யாலயத்தார் வெளியிட்ட அழகிய தமிழ்ப்புத்தகமொன்று நமதுபார்வைக்கு வந்தது. இது, இந்தியநாட்டுப்பெரியாருள் ஒருவரும், நிலமெலாஞ்சென்று, தம் நிகரிலாக் கல்வி கேள்வியறிவுகளாலும் சொல்வன்மையாலும் பலபுகழ்நிறுவிய பருணிதருமான சுவாமி விவேகாநந்தர் ஆங்காங்குக் கல்வியென்னும் பொருள்பற்றிக் கூறியவற்றையெல்லாம் ஆங்கிலத்திற்றெருகுத்ததினின்று தமிழுரை நடையாக மொழிபெயர்த்து, எல்லாமாந்தரும் எளிதிலுணர்ந்திடப் பல்லோர்புகழும்பான்மையில் தந்தது. இதனை மொழிபெயர்த்துதவியவர் தெளிவும் இனிமையும் அமையப் பேசவும் எழுதவும் வல்ல திரு. தி. சு. அவிநாசிலிங்கமவர்களாவர். இதனுள் கல்வியைப் பற்றிய அரிய கருத்துக்கள் பலவும் பல தலைப்பின்கீழ் விரித்து விளக்கப்பட்டுள்ளன. அவையெல்லாம் கற்பாரும் கற்பிப்பாரும் பிறரும் குறிக்கொண்டொழுகற்குரியன. இதனைக் கல்வித்துறையிலீடுபட்டுள்ளவர்களுக்கு அர்ப்பணம்செய்திருப்பது மிகவும் பொருத்தமாகும். இதனை நன்கு ஆதரித்து, இவ்வாறு தக்கவர்களைக்கொண்டு ஸ்ரீராமகிருஷ்ணவித்யாலயத்தார் செய்துவரும் தமிழ்ப்பணி சிறக்கவுதவுவது தமிழ்மக்கள்கடமையாகும். இதன் விலை அணு 12. தபாற்கட்டணம் வேறு. வேண்டுவோர் சென்னை ஜியார்ஜ்டவுண் முத்துமாரிசெட்டிதெரு 46 நிர் வீட்டிலுள்ள சக்திகாரியாலயத்திற் பெறலாம்.

ஸ்ரீராமகிருஷ்ணர் அருள்வாக்கு:—இது, 'முன்னோர் மொழிபொருளேயன்றி யவர்மொழியும் பொன்னேபோற்போற்று'ம் நோக்கொடு, கோவைஜில்லா ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் வித்யாலயத்தாரால், ஆன்றோரருள்வாக்குமலரின் முதற்பிரசுரமாக, மஹான் ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்ஸர் அவ்வப்போது தம்மையடைந்தோர்க்கருளிய உபதேசங்களுள் 53 உபதேசவாக்கியங்களைத்தொகுத்து, நல்லகாகிதத்தில் திருத்தமுற அச்சிட்டு வெளியிடப்பெற்றதொரு சிறிய (கையடக்கப்) புத்தகமாகும். இதனுள், கடவுளும் புண்ணியபாவங்களும் மறுபிறப்பும் உண்மையும், கடவுள் ஜீவர்களிடத்து வெளிப்படுமாறும், கடவுளை வழிபடுமாறும், சாதுசங்கத்தின் மேன்மையும்,

அதனால்விளையும் நன்மையும், மக்கள் தம்வாழ்விற் கடவுட் பத்தி, சிரத்தை, அடக்கம், அருள், தியாகம், பணிவு முதலியவற்றை மேற்கொண்டொழுகவேண்டிய அவசியமும், பிரமசரியத்தின் மேம்பாடும் முதலிய பல உயர்ந்த விஷயங்கள் ஏற்ற எடுத்துக்காட்டுக்களால் நன்கு விளக்கப்பட்டுள்ளன. இவ்வாறே ஏனைய பெரியாரருள்வாக்குக்களும் வெளிவருவது இன்றியமையாததாகும். மக்கள் யாவரும் என்றும் சிந்தித்துவரவேண்டிய அரிய பெரிய கருத்துக்களடங்கிய ஒவ்வோருபதேசவாக்கியத்தையும் ஒவ்வொருபக்கத்திற்கொண்ட இப்புத்தகத்தின் விலை அணா ஒன்று. தபாற்கட்டணம் வேறு. வேண்டுவோர் சென்னை ஜியார்ஜ்டவுண் முத்துமாரிசெட்டிதெருவிலுள்ள சக்திகாரியாலயத்திற் பெறலாம்.

கமலா முதலிய சிறுகதைகள்:—[எழுதியவர்—ஹிந்துஸ்தானுதவியாசிரியர் திரு. ஆர். திருஞானசம்பந்தமவர்கள். பதிப்பித்தோர்—சக்திகாரியாலயத்தார். விலை—ரூபா ஒன்று; தபாற்கட்டணம் வேறு. கிடைக்குமிடம்—சென்னை ஜியார்ஜ்டவுண் முத்துமாரிசெட்டிதெரு 46 நிர் வீட்டிலுள்ள சக்திகாரியாலயம்.] பல்வேறு மக்கள்வாழ்வில் இடையிடையேநிகழும் வெவ்வேறு நிகழ்ச்சிகள்கொண்டு அம்மக்களுடைய உள்ளம் உரை செயல்களை யூடுருவியாராய்ந்து, படைத்துமொழியாற் புதுவதுபுனைந்த இக்கதைகள், சிலசொற்களால் அமைந்த செவ்விய சொற்றொடர்களாற் பல்பொருட்டிறங்களையும் படிப்போர்க் கினியனவாமாறு பல சுவைகளுடன் சித்திரித்துக்காட்டுவனவாயுள்ளன. இவற்றால் ஆசிரியருடைய உலகியலநுபவமும் கற்பனைத்திறமும் உரைநடையெழுதுமாற்றலும் நன்கு வெளியாகும். இவற்றுள், கமலா, கடைசிவெற்றி, மலைக்குப்போனவன் என்பவை தனிச்சிறப்புடையன. இவ்வாறு சக்திகாரியாலயத்தார் தமிழிற் பல உரைநடைநூல்களை வெளியிட்டுவருவது, தமிழ்வளர்ச்சியில் அவர்களுக்குள்ள விருப்ப மிகுதியை விளக்கும்.

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

1	ஐந்திணையைம்பது (உரையுடன்)	0	4	0
2.	களுநால் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ...	0	3	0
3.	*வளையாபதிச்செய்யுட்கள்			
4.	புலவராற்றுப்படை	0	3	0
6.	*நேமிநாதம் (உரையுடன்)			
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) ..	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
11.	*விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம்			
12.	*பன்னிருபாட்டியல்			
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
15.	திருச்செந்திற்கலம்பகம்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்...	0	4	0
19.	தேவையுலா	0	3	0
20.	நரிவிருத்தம்	0	2	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.	*திருக்கலம்பகம் (ஷை)			
23.	*விக்கிரமசோழனுலா			
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை... ...	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை...	0	8	0
28.	*சந்திராலோகம்			
29.	*சோழவம்சசரித்திரச்சுருக்கம்			
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
31.	பாண்டியம்	0	4	0
32.	மநீஷாபஞ்சகம்	0	8	0
33.	வேளிர்வரலாறு	0	8	0
34.	*அகப்பொருள்விளக்கம்			
35.	*திருமந்திர நூறுபாட்டுக்குரை			
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0
39.	*பழமொழி மூலமும் பழையஉரையும் (முதல் 100 செய்)			
40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0

43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்)	1	0	0
48.	சேதுராமேம் தமிழும்	0	6	0
49.	*கடைவள்ளலார்காலம்			
50.	தமிழரும் ஆந்திரரும்	0	4	0
51.	*மதங்கசூளாமணி			
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர் (தமிழ்)	0	6	0
	ஷை (ஆங்கிலம்)	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு ...	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில்அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0
66.	சந்திரகுப்தன்	0	6	0
67.	அமிர்தாஞ்ஜலி	0	2	0

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்" செந்தமிழ் "ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணு 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4—8—0. இதுவரை 38 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி— இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணு வீதம் கமிஷன் தள்ளிக் கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.